# பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2026 – 2027

### மானியக் கோரிக்கை எண். 43


## ராஜ்மோகன்
### பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி,
### செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2026

# பள்ளிக் கல்வித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2026-2027

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தொடக்கக் கல்வி இயக்ககம் | 12 |
| 3. | பள்ளிக் கல்வி இயக்ககம் | 30 |
| 4. | ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | 66 |
| 5. | மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 90 |
| 6. | தனியார் பள்ளிகள் இயக்ககம் | 118 |
| 7. | அரசு தேர்வுகள் இயக்ககம் | 131 |
| 8. | பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் | 149 |
| 9. | ஆசிரியர் தேர்வு வாரியம் | 157 |
| 10. | பொது நூலக இயக்ககம் | 165 |
| 11. | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 179 |

## அத்தியாயம் – I

## முன்னுரை

**"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை."**

**திருக்குறள்–400**

"கல்வி என்பது அழியாத செல்வம்; மற்ற செல்வங்கள் அனைத்தும் நிலையற்றவை." திருவள்ளுவரின் காலத்தால் அழியாத இக்கருத்து, கற்றல் மற்றும் அறிவின் மீது அரசு கொண்டுள்ள நீடித்த அர்ப்பணிப்புக் கொள்கையைப் பிரதிபலிக்கிறது. அதேபோன்று, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் திருவள்ளுவரின் வாக்கு, நீண்டகாலமாகத் தமிழ்நாட்டின் மக்கள் நலக்கொள்கைகளுக்கு அடிப்படையாக விளங்கும் சமத்துவம், சமூகநீதி, மனித மாண்பு ஆகிய கோட்பாடுகளை விளக்குகிறது. அனைவருக்கும் சமமான, அனைவரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்குவதே அரசின் முதன்மை நோக்கமாகும். ஒவ்வொரு குழந்தையும்

கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுத் தம் முழுத்திறமையை உணர்ந்து வாழ்வில் உயர இக்கொள்கைகளே வழிகாட்டுகின்றன.

காலத்திற்கேற்ப மாறிவரும் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அனைத்துக் குழந்தைகளையும் உள்ளடக்கிய எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த கல்விமுறையை உருவாக்குவதற்கான விரிவான வழிகாட்டியாக பள்ளிக்கல்விக்கான **தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை–2025** உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையானது, தமிழ்நாட்டின் செழுமையான மொழி, கலாச்சாரம் மற்றும் சமூகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதோடு, அடிப்படைக் கற்றல், திறன் அடிப்படையிலான கல்வி, ஆசிரியர் சிறப்புத்தகுதி, மின்னுரு மற்றும் தொழில்நுட்பவழிக் கற்றல், எதிர்காலத் திறன்கள் மற்றும் பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய பள்ளிகள் ஆகியனவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

இந்த தொலைநோக்குப் பார்வையைச் செயலில் கொண்டுவரும் வகையில், கல்வியின் தரம், சமத்துவம், அனைவரையும் உள்ளடக்கிய தன்மை மற்றும் எதிர்காலத் தயார்நிலை ஆகியனவற்றை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்கள் மூலம், பள்ளிக்கல்வியை முழுமையாக மாற்றியமைக்கும் ஒரு செயல்திட்டமாக **'வெற்றித் தமிழகம்'** விளங்குகிறது.

அரசுப் பள்ளிகளில் கற்பித்தல் முறையை வலுப்படுத்தப் பள்ளிக் கல்வித்துறை பல்வேறு தொடர் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்போதைய பாடத்திட்டச் சீரமைப்பு, திறன்சார்ந்த கற்பித்தல் முறைகள், அடிப்படை வாசிப்பு மற்றும் கணிதத் திறனை வலுப்படுத்தும் முயற்சிகள், மின்னுரு கல்வியறிவை ஒருங்கிணைத்தல் மற்றும் ஆசிரியர்களின் தொடர்ச்சியான திறன் மேம்பாடு ஆகியவை வகுப்பறைக் கற்பித்தலை மேம்படுத்துவதோடு மாணவர்களின் கல்வித் தரத்தையும் உயர்த்தி வருகின்றன. அனைவருக்கும்

கல்வி, மாணவர்களின் மனநலம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதோடு, மாநிலம் முழுவதும் குழந்தைகளுக்கு உகந்த பாதுகாப்பான கற்றல் சூழலை உருவாக்குவதற்கான தொடர் முயற்சிகளும் மேற்காண் சீர்திருத்தங்களுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டுவது, மாணவர்களின் மனநலனைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை வகுப்பது, போதைப்பொருள் இல்லாத பள்ளிகள் போன்ற முன்னெடுப்புகளைச் செயல்படுத்துவது போன்றவற்றின் மூலம் பள்ளிக் கல்வியில் அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் தொடர்ந்து உறுதி செய்யப்படுகின்றன. இத்தகைய முன்னெடுப்புகள், தொடர்ச்சியான கல்விசார் உறுதுணை மற்றும் ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டுப் பணிகளுடன் இணைந்து, மாணவர்களின் கலந்து கொள்ளும் திறனை அதிகரிப்பதோடு, அவர்கள்

பள்ளிகளில் தொடர்ச்சியாகக் கல்வி கற்கவும், அவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றன.

இந்தியாவிலேயே மிகவும் விரிவான மற்றும் பரவலாக்கப்பட்ட பள்ளிக் கல்வி அமைப்புகளில் ஒன்றாகத் திகழும் நமது மாநிலத்தின் கல்வித்துறையினால் இத்தகைய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் உள்ள **57,566 பள்ளிகளில்**, சுமார் **5.7 இலட்சம் ஆசிரியர்களின்** வழிகாட்டுதலோடு, **1.24கோடிக்கும் அதிகமான மாணவர்கள்** இக்கல்வி அமைப்பினால் பயன்பெற்று வருகின்றனர். தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை–2025 மற்றும் 'வெற்றித் தமிழகம்' திட்டத்தின் நோக்கங்களுக்கு இணங்க, 2026–27ஆம் ஆண்டில் மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துதல், ஆசிரியர்களின் திறனை வளர்த்தல், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் சமமான

கல்வி வாய்ப்பை உறுதி செய்தல் போன்ற பணிகளைப் பள்ளிக் கல்வித்துறை தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

**தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை – புள்ளிவிவரம்**

பள்ளிக் கல்வித்துறையானது இந்தியாவின் மிகப்பெரிய பொதுக்கல்வி அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும், தனியார் பள்ளிகள் குறித்த விவரங்கள், அவற்றில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்களின் புள்ளிவிவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் விவரம்**

| விபரம் | அரசுப் பள்ளிகள் | உதவிபெறும் பள்ளிகள் | தனியார் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பள்ளிகள் | 37,539 | 8,197 | 11,830 | **57,566** |

| விபரம் | அரசுப் பள்ளிகள் | உதவிபெறும் பள்ளிகள் | தனியார் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **மாணவர்கள்** | 43 இலட்சம் | 19 இலட்சம் | 62 இலட்சம் | **1.24 கோடி** |
| **ஆசிரியர்கள்** | 2,26,304 | 74,364 | 2,76,793 | **5,77,461** |

பல்வேறு அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி வாரியங்களின்கீழ் கல்வி பயிலும் மாணவர்கள், தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித்துறையின் பன்முகத்தன்மையையும் அனைவரையும் உள்ளடக்கிய சிறப்பான வளர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றனர்.

## கல்வி வாரியங்கள் குறித்த மாணவர் புள்ளிவிவரம்

| கல்வி வாரியங்களின் வகை | கல்வி வாரியம் / பள்ளியின் வகை | | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாநிலம் | 1 | மாநிலப் பாடத்திட்டம் (State Board) | 54,104 | 1,03,22,954 |
| | 2 | மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி (Nursery & Primary) | 1,722 | 3,97,269 |

| கல்வி வாரியங்களின் வகை | கல்வி வாரியம் / பள்ளியின் வகை | | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சி.பி.எஸ்.இ (CBSE) | 3 | சி.பி.எஸ்.இ (CBSE) | 1,562 | 15,88,183 |
| மற்ற வாரியங்கள் (Other Board) | 4 | ஐ.சி.எஸ்.இ (ICSE) | 90 | 65,999 |
| | 5 | கேம்பிரிட்ஜ் (Cambridge) | 44 | 19,859 |
| | 6 | பன்னாட்டு வாரியம் (International Board) | 14 | 6,501 |
| | 7 | ஐ.பி (IB) | 2 | 581 |
| | 8 | ஐ.ஜி.சி.எஸ். இ (IGCSE) | 1 | 190 |
| | 9 | விளையாட்டு ப் பள்ளி (Play School) | 27 | 1,336 |
| **மொத்தம் (Grand Total)** | | | **57,566** | **1,24,02,872** |

கல்விக்கான வாய்ப்புகள், மாணவர்களின் பங்களிப்பு மற்றும் கல்வித்தரம் ஆகிய முக்கியக் குறியீடுகளில் தேசிய சராசரியைக் காட்டிலும் சிறந்து விளங்கி, நாட்டின் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு தொடர்ந்து திகழ்கிறது. தேசிய

சராசரியுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டின் சிறப்பான செயல்பாடுகள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| குறியீடுகள் | கல்வி நிலை | தமிழ்நாடு | தேசிய சராசரி |
|---|---|---|---|
| மொத்த சேர்க்கை விகிதம் (GER) | தொடக்கக் கல்வி (Primary) | 92.2 | 89.4 |
| | உயர் தொடக்கக் கல்வி (Upper Primary) | 95.2 | 89.6 |
| | இடைநிலைக் கல்வி (Secondary) | 97.4 | 81.5 |
| | மேல்நிலைக் கல்வி (Higher Secondary) | 85.1 | 61.7 |
| இடைநிற்றல் விகிதம் (Dropout Rate) | தொடக்கக் கல்வி (Primary) | 0.0 | 0.3 |
| | உயர் தொடக்கக் கல்வி (Upper Primary) | 0.0 | 3.6 |
| | இடைநிலைக் கல்வி (Secondary) | 6.2 | 9.5 |

| குறியீடுகள் | கல்வி நிலை | தமிழ்நாடு | தேசிய சராசரி |
|---|---|---|---|
| மாணவர் – ஆசிரியர் விகிதம் (PTR) | தொடக்கக் கல்வி (Primary) | 19 | 19 |
| | உயர் தொடக்கக் கல்வி (Upper Primary) | 17 | 17 |
| | இடைநிலைக் கல்வி (Secondary) | 12 | 15 |
| | மேல்நிலைக் கல்வி (Higher Secondary) | 20 | 23 |

ஆதாரம்: UDISE+

இக்கொள்கை விளக்கக் குறிப்பு, 2026–27ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வித்துறையின் சாதனைகள், நடைமுறையிலுள்ள திட்டங்கள் மற்றும் முக்கிய அணுகுமுறைகளை எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு மாணவரும் தமது முழுத் திறமையையும் உணர்ந்து உயர வழிவகுப்பதோடு, தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார வளர்ச்சிக்குப்

பங்களிக்கும் வகையில், சமமான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக்கும் கல்வியை வழங்குவதில் இத்துறை தொடர்ந்து உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

# அத்தியாயம் – II

# தொடக்கக் கல்வி இயக்ககம்

## 2.1 அறிமுகம்

தொடக்கக் கல்வி இயக்ககம், தமிழ்நாட்டில் I முதல் VIII ஆம் வகுப்பு வரை உள்ள தொடக்கக் கல்வியைத் திட்டமிடுதல், நிருவகித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. தொடக்கக் கல்வி என்பது முறையான பள்ளிக்கல்வியின் அடித்தளமாகும். இப்பருவத்தில் குழந்தைகள் தங்களது எதிர்காலக் கற்றல் மற்றும் வளர்ச்சிக்கான அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் வாழ்க்கைத் திறன்களைப் பெறுகின்றனர். தரமான தொடக்கக் கல்வியை அனைவரும் பெறுவதை உறுதிசெய்தல், கற்றல் விளைவுகளைத் தொடர்ந்து மேம்படுத்துதல், உள்ளடக்கிய மற்றும் சம வாய்ப்புடைய கல்விச்சூழலை வலுப்படுத்துதல் மற்றும் மாணவர்களின் வளர்ச்சிக்கான முழுமையான முன்னெடுப்புகளைச் செயல்படுத்துவதிலும் தொடக்கக் கல்வி இயக்ககம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

## 2.2 அனைவருக்கும் தொடக்கக் கல்வியை உறுதிசெய்தல்

அனைவருக்கும் தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதிசெய்வது இவ்வியக்ககத்தின் முதன்மையான பணியாகும். தமிழ்நாடு அரசு, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள்–2011இன் படி, ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலிருந்தும் ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் ஒரு தொடக்கப் பள்ளியையும், மூன்று கிலோமீட்டர் தொலைவிற்குள் ஒரு நடுநிலைப் பள்ளியையும் அமைப்பதன் மூலம், குழந்தைகள் எளிதாகப் பள்ளிக்குச் செல்வதனை உறுதிசெய்வதை இவ்வியக்ககம் இலக்காகக் கொண்டுள்ளது.

தேவைப்படும் இடங்களில், மாணவர் சேர்க்கை மற்றும் உள்ளூர்த் தேவைகளின் அடிப்படையில் புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்படுகின்றன; அத்துடன் வரையறைக்குட்பட்ட தகுதியான தொடக்கப்பள்ளிகள்

நடுநிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. புதிய பள்ளிகள் தொடங்க வாய்ப்பில்லாத தொலைதூர, மலைப்பாங்கான மற்றும் குறைந்த மக்கள் தொகை கொண்ட பகுதிகளில், தடையற்ற கல்வியை அளிக்கும் பொருட்டுப் பாதுகாவலர் மற்றும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுகின்றன.

| வகை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் (1 முதல் 5 வகுப்புகள்) | 29,337 | 12,87,159 | 74,082 |
| நடுநிலைப் பள்ளிகள் (1 முதல் 8 வகுப்புகள்) | 8,495 | 9,08,897 | 58,443 |
| **மொத்தம்** | **37,832** | **21,96,056** | **1,32,525** |

## 2.3 தொடக்கக் கல்வியை வலுப்படுத்துதல்

தொடக்கக் கல்வியை அனைத்துப் பரிமாணங்களிலும் வலுப்படுத்தும் நோக்கில், அனைவருக்கும் தரமான கல்வி கிடைப்பதை

உறுதிசெய்தல், அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை மேம்படுத்துதல், மாணவர்களின் பள்ளிச்சேர்க்கை மற்றும் தொடர்ச்சியான வருகையை உறுதிப்படுத்தி இடைநிற்றலைக் குறைத்தல், உள்ளடக்கிய கல்வியை வலுப்படுத்துதல், ஆசிரியர்களின் பணித் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் கல்வி நிறுவனங்களின் செயல்திறனை உயர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறையைத் தொடக்கக் கல்வி இயக்ககம் பின்பற்றி வருகிறது. கல்விசார் வழிகாட்டுதல், திறன்மிகு பள்ளி நிருவாகம் மற்றும் மாணவர் மையக் கற்றல் அணுகுமுறைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதன் மூலம், ஒவ்வொரு மாணவரும் உறுதியான அடிப்படைக் கற்றல் திறன்களைப் பெற்று, இடைநிலைக் கல்விக்குச் சீரான முறையில் முன்னேறுவதைத் தொடக்கக் கல்வி இயக்ககம் உறுதிசெய்கிறது.

## 2.4 அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை வலுப்படுத்துதல்

அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை உறுதிப்படுத்துவது, தொடக்கக் கல்வி இயக்ககத்தின் முன்னுரிமை பெற்ற பணிகளில் ஒன்றாகும். ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் ஒவ்வொரு மாணவரும் தமது வயது மற்றும் வகுப்பிற்கு ஏற்ப எதிர்பார்க்கப்படும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களைப் பெறுவதை உறுதிசெய்யும் நோக்கில், திறனடைவுகளை மையமாகக் கொண்ட கலைத்திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கேற்ப உருவாக்கப்பட்டுள்ள புதிய பாடப்புத்தகங்கள், குழந்தைமையக் கற்றல் அணுகுமுறை, திட்டமிட்ட கற்றல் செயல்பாடுகள், ஆசிரியர்களுக்கான கற்பித்தல் வழிகாட்டுதல்கள், வகுப்பறை அடிப்படையிலான தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் கற்றல் இடைவெளிகளைக் குறைக்கும்

மீள்கற்றல் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் முழுமையான கற்றல், கற்பித்தல் வளங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

செயல்வழிக் கற்றலை ஊக்குவித்தல், மாணவர்களின் சமூக மற்றும் மனவெழுச்சி திறன்களை வளர்த்தல், தொடக்க வகுப்புகளிலேயே நுண்தசைத்திறன்களை மேம்படுத்துதல், கற்றல் முன்னேற்றத்தைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து மதிப்பீடு செய்தல் ஆகிய ஒருங்கிணைந்த கல்வி அணுகுமுறைகளின் மூலம் வகுப்பறைக் கற்றல் மேலும் பயனுள்ளதாக்கப்படுகிறது. இதன் விளைவாக, ஒவ்வொரு மாணவரும் எதிர்பார்க்கப்படும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை அடைந்து மேம்பட்ட கற்றல் நிலைகளுக்கு உறுதியான அடித்தளத்துடன் முன்னேறுவதற்கான சூழல் உருவாக்கப்படுகிறது.

## 2.5 உள்ளடக்கிய மற்றும் குழந்தை மையக் கல்வி

பாதுகாப்பான, உள்ளடக்கிய மற்றும் குழந்தை நேயமிக்க கற்றல் சூழலில், அனைத்துக் குழந்தைகளுக்கும் சமவாய்ப்புடன் தரமான தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதிசெய்வதில் தொடக்கக் கல்வி இயக்ககம் உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகள், மாற்றுத்திறனுடைய குழந்தைகள், பெண் குழந்தைகள், பழங்குடியினர், தொலைதூரப் பகுதியில் உள்ள மாணவர்கள் மற்றும் கல்வி வசதிகள் போதிய அளவில் இல்லாத பகுதிகளில் வாழும் குழந்தைகள் ஆகியோரின் கல்வித் தேவைகளுக்குச் சிறப்பு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அவர்களின் முழுமையான கல்விப் பங்கேற்பை உறுதிசெய்ய பல்வேறு ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளடக்கிய கல்வி நடைமுறைகள், குழந்தை மையக் கற்றல்–கற்பித்தல் அணுகுமுறைகள், மாணவர்களின் கற்றல் தேவைகளைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து உரிய கல்விக்கான உரிய உதவிகள் கிடைக்கச் செய்தல், தொடர்ச்சியான கல்விசார் வழிகாட்டுதல் மற்றும் சமூகப் பங்கேற்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம், ஒவ்வொரு மாணவரும் பாகுபாடின்றிக் கற்றல் வாய்ப்புகளைப் பெற்றுத் தமது முழுத் திறனையும் வெளிப்படுத்தக்கூடிய சமத்துவம், பங்கேற்பு மற்றும் முழுமையான வளர்ச்சி ஆகியவற்றை உறுதிசெய்யும் ஒரு பள்ளிச் சூழலை உருவாக்கத் தொடக்கக் கல்வி இயக்ககம் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

**2.6 மாணவர்களுக்கான கற்றல் துணை வளங்கள்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றலை வலுப்படுத்தவும், தரமான கல்வி அனைவருக்கும் சமமாகக் கிடைப்பதை

உறுதிசெய்யவும், தமிழ்நாடு அரசு பல்வேறு கற்றல் துணை வளங்களை வழங்கி வருகிறது. இத்துணை வளங்கள், மாணவர்கள் வகுப்பறைக் கற்றல் செயல்பாடுகளில் முழுமையாகப் பங்கேற்க வழிவகுப்பதுடன், கற்றல்–கற்பித்தல் செயல்முறையின் தரத்தையும் செயல்திறனையும் மேம்படுத்துகின்றன. மேலும், முதன்மையான கல்வி வளங்களைப் பெறுவதில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, அனைத்து மாணவர்களுக்கும் சமமான கற்றல் வாய்ப்புகளை உறுதிசெய்வதன் மூலம், கற்றல் அடைவுகளை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றன. நடப்பு ஆண்டில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கற்றல் துணை வளங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவினம் |
|---|---|---|
| பாடப்புத்தகங்கள் | 24.04 இலட்சம் | ₹196.72 கோடி |

| | | |
|---|---|---|
| நோட்டுப் புத்தகங்கள் | 24.01 இலட்சம் | ₹65.25 கோடி |
| நான்கு இணைச் சீருடைகள் | 29.43 இலட்சம் | ₹547.13 கோடி |
| காலணிகள், காலேந்திகள் & காலுறைகள் | 24.12 இலட்சம் | ₹35.70 கோடி |
| கம்பளிச் சட்டை | 62,311 | ₹1.68 கோடி |
| புத்தகப் பை, வண்ணக்குச்சிகள், வண்ணப் பென்சில் & கணித உபகரணப் பெட்டி | --- | ₹53.58 கோடி |
| புவியியல் வரைபடப்புத்தகம் | 1.82 இலட்சம் | ₹0.62 கோடி |
| வருமானம் ஈட்டும் பெற்றோரின் இறப்பு/ நிரந்தர முடக்கத்தால் பாதிக்கப்பட்ட பெற்றோரின் குழந்தைகளுக்கான நிதி உதவி | 167 மாணவர்கள் | ₹5.00 கோடி |

## 2.7 பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு

பள்ளிகளில் தரமான கற்றல், கற்பித்தல் செயல்முறைக்கு உகந்த சூழலை உருவாக்குவதில், போதுமான மற்றும் தரமான உட்கட்டமைப்பு வசதிகள் அடிப்படைத் தேவையாகும். இதனைக் கருத்தில்கொண்டு, தொடக்கக் கல்வி இயக்ககம் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் இதர கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, பள்ளிகளின் உட்கட்டமைப்பைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. அவ்விவரங்கள் பின்வருமாறு:

| உட்கட்டமைப்பு விவரம் | மொத்த பணிகள் | நிறைவு செய்யப்பட்டவை | நடந்து கொண்டிருப்பவை |
|---|---|---|---|
| புதிய கூடுதல் வகுப்பறைகள் | 1324 | 341 | 983 |
| ஆய்வகங்கள் | 253 | 66 | 187 |
| நிதிஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) | 284 | 73.84 | 210.16 |

பள்ளிக் கல்வியில் மின்னுரு உட்கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைத்ததன் மூலம் கலந்துரையாடல் மற்றும் ஈடுபாட்டைத் தூண்டும் கற்றல் சூழல்கள் வழியாகக் வகுப்பறைக் கற்றல்–கற்பித்தல் செயல்முறை, தொழில்நுட்பத்துடன் இணைத்து நவீன மயமாக்கப்பட்டுள்ளது. திறன் வகுப்பறைகள் (Smart Classrooms) மற்றும் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hi–Tech Laboratories) வாயிலாக, தொழில்நுட்பம் சார்ந்த கற்றல், கற்பித்தல் நடைமுறைகள் வலுப்படுத்தப்பட்டு, மின்னுரு கற்றல் விரிவுபடுத்தப்படுவதுடன், மாணவர்களின் கற்றல் அனுபவம் செழுமைப்படுத்தப்படுகிறது.

## 2.8 கல்விசார் சாதனைகளுக்கான அங்கீகாரம்

கல்வியில் சிறப்பையும், புதுமைமிக்க செயல்பாடுகளையும் ஊக்குவிக்கும் நோக்கில், கல்வி அடைவுகள், சமூகப் பங்களிப்பு மற்றும் நிறுவனம் சார்ந்த மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க சாதனைகளைப்

புரியும் பள்ளிகளைத் தொடக்கக் கல்வி இயக்ககம் அங்கீகரித்துப் பாராட்டி வருகிறது. இவ்வங்கீகாரங்கள், பள்ளிகளில் தரம் சார்ந்த தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவிப்பதோடு, அரசுப் பள்ளிகளின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் உயர்த்துகின்றன.

**அங்கீகாரங்கள் மற்றும் விருதுகள் வழங்கப்பட்ட விவரங்கள்**

| முன்னெடுப்பு | சாதனை |
|---|---|
| சிறந்த பள்ளிகளுக்கான கேடயம் (2024–25) | 114 பள்ளிகள் |
| மாணவர் சேர்க்கை அதிகரிப்புக்கான பாராட்டுச் சான்றிதழ் (2025–26) | 179 பள்ளிகள் |

கல்வித்தர மேம்பாட்டில் முன்மாதிரியான செயல்பாடுகளை மேற்கொண்டு, மாணவர் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்த பள்ளிகளை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில்,

சிறந்த பள்ளிகளுக்கான கேடயம், பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## 2.9 ஆசிரியர் நியமனம் மற்றும் மனிதவள மேம்பாடு

தரமான தொடக்கக் கல்வியை உறுதிசெய்வதில் ஆசிரியர்கள் மிக முக்கியமான மனிதவளமாக விளங்குகின்றனர். பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படாத வகையில், காலிப்பணியிடங்களை வழக்கமான நடைமுறைகளின் மூலம் நிரப்புவதற்கான நடவடிக்கைகளைத் தொடக்கக் கல்வி இயக்ககம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மேலும், நிரந்தர நியமனங்கள் மேற்கொள்ளப்படும் வரை, வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளில் தொடர்ச்சியை உறுதிசெய்யும் வகையில், தேவைக்கேற்பப் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் வாயிலாகத் தேவைக்கேற்பத் தற்காலிக ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுகின்றனர்.

**2025–26ஆம் ஆண்டில் புதிதாக மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம் பணியமர்த்தப்பட்ட ஆசிரியர் நியமன விவரம்**

| விவரம் | நியமன எண்ணிக்கை |
|---|---|
| ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் | 2,409 |
| ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் | 18 |
| பள்ளி மேலாண்மைக் குழு (SMC) மூலம் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் | 4,261 |
| பள்ளி மேலாண்மைக் குழு (SMC) மூலம் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் | 2,709 |
| தற்காலிக நியமனங்களுக்கான மதிப்பிடப்பட்ட செலவு | ₹100.94 கோடி |

ஒவ்வொரு பள்ளியிலும் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் போதுமான அளவில் பணியமர்த்தப்படுவதை உறுதி செய்வதற்குத்

தொடக்கக் கல்வி இயக்ககம் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. இதன் மூலம் வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் வலுப்பெற்றுத் தொடக்கக் கல்வி அமைப்பு முழுவதும் மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்துவதற்கான வலுவான அடித்தளம் உருவாக்கப்படுகிறது.

## 2.10 பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத்திட்டம்

அரசு, அரசு நிதி உதவிபெறும் 37,447 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத்திட்டத்தின் வாயிலாக உணவு வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு கல்வி ஆண்டில் இத்திட்டம் 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தின் வாயிலாக 1 முதல் 8ஆம் வகுப்பு பயிலும் 34,48,504 மாணவர்கள் பயன்பெறுவர். இத்திட்டத்திற்கென ரூ.724.52 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.11 முடிவுரை

தொடக்கக் கல்விக்கான வலுவான அடித்தளத்தை உருவாக்கும் நோக்கில், பள்ளிகளுக்கான வசதிகளை விரிவுபடுத்துதல், கல்வித் தரத்தை மேம்படுத்துதல், ஆசிரியர்களது பணித் திறன்களுடன் கல்வி நிறுவனம் சார்ந்த செயல்திறன்களையும் உயர்த்துதல் ஆகிய பொருண்மைகளில் தொடக்கக் கல்வி இயக்ககம் தொடர்ந்து முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. பள்ளிகளை நவீனமயமாக்குதல், ஆசிரியர்களின் தொடர்ச்சியான பணித்திறன் மேம்பாடு மற்றும் மாணவர் மையக் கற்றல், கற்பித்தல் அணுகுமுறைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதன் மூலம், மேம்பட்ட கற்றல் அடைவுகளையும், குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியையும் உறுதிசெய்யும் தரமான கல்விச் சூழலை உருவாக்கி வருகிறது. இம்முன்முயற்சிகள், நீண்டகால நோக்கில் தமிழ்நாட்டின் கல்வி

முன்னேற்றத்தை நிலைநிறுத்துவதோடு தரமான, சமத்துவமான மற்றும் உள்ளடக்கிய கல்வியை அனைவருக்கும் உறுதிசெய்யும் அரசின் உயரிய நோக்கத்தை நிறைவேற்றுவதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன.

# அத்தியாயம் – III

# பள்ளிக் கல்வி இயக்ககம்

## 3.1 அறிமுகம்

பள்ளிக்கல்வி இயக்ககம் (Directorate of School Education – DSE) என்பது, தமிழ்நாட்டில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான பள்ளிக் கல்வியைத் திட்டமிடுதல், நிருவகித்தல் மற்றும் வலுப்படுத்துதல் ஆகியனவற்றிற்குப் பொறுப்பேற்கும் கல்வி மற்றும் நிருவாக அமைப்பாகும். கற்பித்தல் மற்றும் கற்றலின் தரத்தை மேம்படுத்துதல், ஈடுஇணையற்ற கல்விச் செயல்பாடுகளை ஊக்குவித்தல், இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் சமத்துவமான மற்றும் உள்ளடக்கிய கல்வி வாய்ப்புகளை உறுதிசெய்தல், மாணவர் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியனவற்றில் இவ்வியக்ககம் பெரும்பங்கு வகிக்கிறது. பள்ளிக் கல்வி இயக்ககம், மாணவர்களுக்குப் பொதுக்கல்வி, தொழிற்கல்வி,

கல்விஇணைச் செயல்பாடுகள் மற்றும் மாணவர் மேம்பாட்டுத் திட்டங்களை வழங்குவதன் மூலம் உயர்கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூகத்திற்கு ஏற்ற குடிமையியல் பண்புள்ளவர்களாக உருவாக்குகிறது.

## 3.2 இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை வலுப்படுத்துதல்

பள்ளிக் கல்வி இயக்ககம், முறையாகத் திட்டமிடப்பட்ட கல்வி ஆய்வுகள், வகுப்பறை மற்றும் மாணவர்களை மையமிட்ட ஆய்வுகள் மூலம் பள்ளிக் கல்விசார் செயல்திறன்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இம்முயற்சிகள், கற்றல் விளைவுகளை மேம்படுத்தவும், கற்றல் இடைவெளிகளைக் குறைக்கவும், மாணவர்கள் கல்விசார்ந்த உயர்வான சாதனைகளை அடையவும் ஊக்குவிக்கின்றன.

புதுமையான கல்வித் திட்டங்கள், மின்னுரு கற்றல் வளங்கள், திறனடிப்படையிலான வகுப்பறைக்

கற்பித்தல் முறைகள் மற்றும் இலக்கு நோக்கிய கல்வி போன்றவை தரமான கல்விச் செயல்பாடுகளை மேம்படுத்த உதவுகின்றன. இம்முயற்சிகள், மாணவர்களைப் பொதுத்தேர்வுகளுக்கு மட்டுமல்லாமல் உயர்கல்வி, போட்டித்தேர்வுகள் மற்றும் எதிர்காலத் தொழில் வாய்ப்புகளுக்கும் ஆயத்தப்படுத்துகின்றன. ஒட்டுமொத்தமாக, இத்திட்டங்கள் கல்வித்தரத்தில் நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதோடு, அரசுப்பள்ளி மாணவர்கள், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்புகளையும் விரிவுபடுத்துகின்றன.

### 3.3 தொழிற்கல்வி

தொழிற்கல்வி என்பது இடைநிலை மற்றும் உயர்கல்வியின் ஒருங்கிணைந்த அங்கமாகும். இது உயர்கல்வி, திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பிற்குத் தேவையான தொழில்துறை சார்ந்த அறிவு, செய்து கற்கும் திறன்கள் மற்றும் தொழில்திறன்களை மாணவர்களுக்கு வழங்குகிறது.

வளர்ந்து வரும் தொழில்துறையின் தேவைகளுக்கும், பணி உலகின் மாற்றங்களுக்கும் ஏற்ப பள்ளிக்கல்வியை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதன் மூலம் பள்ளிக் கல்வி இயக்ககம், தொழிற்கல்வியைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

தற்போது **598 அரசுப் பள்ளிகளில்**, **12 தொழிற் பிரிவுகளில் 22,656 மாணவர்கள்** தொழிற்கல்வி பயின்று வருகின்றனர். தேசியத் திறன் தகுதிக் கட்டமைப்பு (NSQF) அடிப்படையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், தொழில் திறன் பயிற்சி (Internship), சான்றிதழ் பயிற்சித் திட்டங்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் முயற்சிகள் மூலம் மாணவர்களுக்குச் செய்முறை அனுபவம் வழங்கப்படுகிறது. இதன்மூலம், வேலைவாய்ப்புத் திறன்கள் மேம்படுத்தப்படுவதுடன், உயர்கல்வி, தொழில் முனைவோருக்கான முயற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புத் துறைகளில் மாணவர்கள் எளிதில்

முன்னேற வழிவகைகள் செய்யப்படுகின்றன. தொழிற்கல்வியைத் தொடர்ந்து வலுப்படுத்துவதன் மூலம் எதிர்காலப் பொருளாதார வாய்ப்புகளை எதிர்கொள்ளக்கூடிய திறமையான மனிதவளத்தை உருவாக்குவதிலும் பள்ளிக் கல்வி இயக்ககம் பெரும் பங்காற்றுகிறது.

### 3.4 உள்ளடக்கிய கல்விச்சூழல்

சிறப்புத் தேவையுடைய குழந்தைகள் (CWSN), சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோருக்கு உறுதுணை அளிக்கும் கல்வியை வழங்குவதன் மூலம் உள்ளடக்கிய கற்றல் சூழலைப் பள்ளிக் கல்வி இயக்ககம் தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது. மேலும், மாணவர்களின் பல்வகையான கற்றல் தேவைகளைக் கருத்தில்கொண்டு, அனைத்து மாணவர்களும் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளில் முழுமையாகப் பங்கேற்கும் வகையில் உள்ளடக்கிய கற்பித்தல் நடைமுறைகளைப் பள்ளிகள் பின்பற்ற ஊக்குவிக்கின்றது.

மாணவர்களின் வருகைப் பதிவு, கல்வி முன்னேற்றம் மற்றும் பள்ளியில் தக்கவைத்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் கூடுதல் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் உதவிகளும் வழங்கப்படுகின்றன. இத்திட்டங்கள், இலக்கு நோக்கிய கல்வியுடன் மாணவர் நலத் திட்டங்களை இணைத்துச் செயல்படுத்தப்படுவதன் மூலம் இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் மாணவர்கள் தொடர்ந்து கல்வி பயிலவும், இடைநிற்றலைத் தடுக்கவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன.

இத்தகைய ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம் கல்வியில் சமமான வாய்ப்புகளை மேம்படுத்தி, ஒவ்வொரு மாணவரும் தமது முழுத்திறனையும் வெளிப்படுத்தும் சூழலைப் பள்ளிக் கல்வி இயக்ககம் உருவாக்கி வருகிறது.

## 3.5 கல்வி இணைச் செயல்பாடுகள்

மாணவர்களின் முழுமையான வளர்ச்சி என்பது வகுப்பறைக் கற்றலைத் தாண்டி அவர்களின் அனுபவங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதைப் பள்ளிக் கல்வி இயக்ககம் உணர்ந்துள்ளது. படைப்பாற்றல், அறிவியல் மனப்பான்மை, தலைமைத்துவம், தொடர்புத்திறன், பண்பாட்டு விழிப்புணர்வு மற்றும் ஆளுமை மேம்பாட்டை வளர்க்கும் பல்வேறு கல்வி இணைச் செயல்பாடுகள், பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள், வகுப்பறைக் கற்றலுக்குத் துணைபுரியும் அனுபவ அடிப்படையிலான கற்றல் வாய்ப்புகளை வழங்குவதோடு தம் திறமை, ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளவும் மாணவர்களுக்கு உதவுகின்றன.

**(அ) வானவில் மன்றம்**

வானவில் மன்றம் (நடமாடும் அறிவியல் ஆய்வகம்), 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தையும் செய்முறைக் கற்றலையும் ஊக்குவிக்கிறது. அறிவியல் விளக்கங்கள், செய்முறைப் பரிசோதனைகள் மற்றும் போட்டிகள் மூலம் அறிவியல் கற்றல் மேம்படுத்தப்படுகிறது. **₹12 கோடி** செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் மூலம் இதுவரை **25 இலட்சம் மாணவர்கள்** பயனடைந்துள்ளனர். மேலும், சிறந்த மாணவர்களுக்கு உலகளாவிய கல்வி அனுபவப் பயணங்களில் பங்கேற்கும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

**(ஆ) மாணவர் மன்றங்கள்**

அரசின் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் இலக்கிய மன்றம், வினாடி–வினா மன்றம், திரைப்படத் திரையிடல் மன்றம் மற்றும் பிற மன்றங்கள் மூலம் மாணவர்களின்

முழுமையான திறன் வளர்ச்சியையும் பள்ளிக் கல்வி இயக்ககம் ஊக்குவித்து வருகிறது. 2025–26ஆம் ஆண்டில், இம்மன்றச் செயல்பாடுகளில் **21.03 இலட்சம் மாணவர்கள்** பங்கேற்றனர். இம்மன்றங்கள் மாதாந்திரச் செயல்பாடுகள் மற்றும் போட்டிகள் மூலம் மாணவர்களிடையே தலைமைத்துவம், தகவல் தொடர்புத் திறன், குழுப்பணி, படைப்பாற்றல் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களை வளர்க்கின்றன.

**(இ) மகிழ் முற்றம் (House System)**

**மகிழ் முற்றம் (House System)** திட்டத்தின் மூலம் மாணவர்களும் ஆசிரியர்களும் **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை** என்னும் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டுச் செயல்படுகின்றனர். வழக்கமான குழுக்கூட்டங்கள், தலைமைத்துவப் பயிற்சிகள் மற்றும் குழுக்களுக்கு இடையேயான போட்டிகள் மூலம் மாணவர்களின் தலைமைத்துவம், ஒத்துழைப்பு, குழுப்பணி மற்றும் ஆளுமை மேம்பாடு போன்றவை ஊக்குவிக்கப்படுகின்றன.

ஒட்டுமொத்தமாக, இக்கல்வி இணைச் செயல்பாடுகள் அனைத்தும் மாணவர்களிடம் படைப்பாற்றல், அறிவியல் ஆர்வம், தலைமைத்துவம், குழுப்பணி, தொடர்புத்திறன் மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வை வளர்த்து வகுப்பறைக் கற்றலுக்குத் துணைப்புரிகின்றன. மேலும், தன்னம்பிக்கையும் பொறுப்புணர்வும் சமூக அக்கறையும் கொண்ட குடிமக்களாக மாணவர்களை உருவாக்க இவை முக்கியப் பங்காற்றுகின்றன.

**(ஈ) குழந்தைகள் திரைப்பட விழா**

**குழந்தைகள் திரைப்பட விழா,** 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை மாணவர்களிடையே கலை உணர்வு, படைப்பாற்றல் மற்றும் தகவல்தொடர்புத் திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது. திரைப்படங்களைத் திரையிடல், கதை ஆய்வு, நடிப்புக்கான பயிற்சிப் பட்டறைகள், குறும்படத் தயாரிப்பு மற்றும் திரைப்படத் துறை வல்லுநர்களுடனான கலந்துரையாடல்கள் மூலம்

மாணவர்கள் பல்வேறு பண்பாடுகள், பாரம்பரியங்கள் மற்றும் கலை வெளிப்பாடுகளை அறிந்து, படைப்புச் சிந்தனையுடன் கருத்துகளை வெளிப்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்கின்றனர்.

### 3.6 பாடம் சாராச் செயல்பாடுகள்

மாணவர்களிடையே உடல்நலம், ஒழுக்கம், தலைமைத்துவம், குழுப்பணி மற்றும் சமூகப் பொறுப்புணர்வை மேம்படுத்துவதில் பாடம் சாராச் செயல்பாடுகளும் முக்கியப் பங்கு வகிப்பதைப் பள்ளிக் கல்வி இயக்ககம் நன்கு உணர்ந்துள்ளது. இத்திட்டங்கள் வகுப்பறைக் கற்றலை ஊக்கப்படுத்துவதோடு, மாணவர்கள் தம் தனித்திறன்களை வளர்த்துக்கொள்ளவும், தன்னம்பிக்கையைப் பெறவும், சமூக மற்றும் தேசிய வளர்ச்சியில் பங்கெடுக்கவும் வாய்ப்பளிக்கின்றன. விளையாட்டு, இளைஞர் அமைப்புகள் மற்றும் சேவைச் செயல்பாடுகள் மூலம் மாணவர்கள் முழுமையான

ஆளுமை வளர்ச்சிக்குத் தேவையான வாழ்க்கைத் திறன்களைப் பெறுகின்றனர்.

**(அ) விளையாட்டு மற்றும் உடற்கல்வி**

பள்ளி அளவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளைப் பள்ளிக் கல்வி இயக்ககம் நடத்தி, அரசுப் பள்ளி மாணவர்களிடையே விளையாட்டுத் திறமைகளைக் கண்டறிந்து அவர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்க ஊக்குவிக்கிறது. இப்போட்டிகள் உடல் தகுதி, ஒழுக்கம், குழுப்பணி மற்றும் விளையாட்டு மனப்பான்மையை வளர்ப்பதோடு, மாணவர்கள் அடுத்தக்கட்டப் போட்டிகளில் பங்கேற்றுச் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகின்றன.

**69வது தேசியப் பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு 206 பதக்கங்களை வென்று** குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்துள்ளது. இது பள்ளி மாணவர்களிடையே விளையாட்டுத் திறனை

மேம்படுத்துவதில் மாநிலத்தின் தொடர்ச்சியான முன்னெடுப்பை வெளிப்படுத்துகிறது. மேலும், அரசுப்பள்ளிகளில் **சதுரங்கம்** அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் மாணவர்களின் பகுப்பாய்வுத் திறன், திட்டமிடும் திறன் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன் போன்றவை மேலும் வலுப்பெற்றுள்ளன.

**(ஆ) இளைஞர் மேம்பாட்டுத் திட்டங்கள்**

மாணவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, தலைமைத்துவம், ஒழுக்கம், குழுஉணர்வு, சமூகப்பொறுப்பு மற்றும் வாழ்வியல் திறன்களை வளர்க்கும் பாடம் சாராச் செயல்பாடுகளில் பள்ளிக் கல்வி இயக்ககம் மாணவர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கிறது. தன்னார்வச் சேவை மற்றும் சமூகப்பணி புரியும் மனப்பான்மையை மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையே வளர்க்கும் நோக்கில்,

- மாநிலம் முழுவதும் **1,953 நாட்டு நலப்பணித் திட்ட (NSS) அலகுகள்** செயல்பட்டு வருகின்றன. இவற்றில் **97,650 மாணவத் தன்னார்வலர்கள்** இணைந்துள்ளனர்.
- **பாரத சாரண சாரணியர் இயக்கம்,** மாநிலம் முழுவதும் **29,045 அலகுகள்** மூலம் **4,52,461 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை** இணைத்து, ஒழுக்கம், நற்பண்பு, தன்னம்பிக்கை மற்றும் குடிமைப் பொறுப்புணர்வை வளர்த்து வருகிறது.
- அதேபோல், **இளம் செஞ்சிலுவைச் சங்கம் (JRC) 12,158 அலகுகள்** மூலம் **4,15,014 மாணவத் தன்னார்வலர்களை**, ஆசிரிய ஆலோசகர்களின் வழிகாட்டுதலின்கீழ், மனிதநேயம், சுகாதார விழிப்புணர்வு மற்றும் சமூகச் சேவையில் ஈடுபடுத்தி வருகிறது.

இத்தகைய பாடம் சாராச் செயல்பாடுகள் மாணவர்களின் உடல், மனவெழுச்சி மற்றும் சமூக வளர்ச்சியை ஊக்குவித்து, கல்வியுடன்

தன்னம்பிக்கைமிக்க, ஒழுக்கமுள்ள மற்றும் பொறுப்பான குடிமக்களாக உருவாக்க உதவுகின்றன.

தன்னார்வத்தொண்டு, குழுப்பணி மற்றும் பொறுப்புள்ள குடிமக்களாக இருப்பதை ஊக்குவிக்கும் இத்தகைய முன்னெடுப்புகள், மாணவர்கள் சமூகத்திற்கு உரிய பங்களிப்பைச் செய்வதோடு, இரக்கம், தலைமைப் பண்புகள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றை வளர்த்துக்கொள்ளவும் உதவுகின்றன.

**(இ) மாணவர் திறன் மேம்பாடு மற்றும் செறிவூட்டல் திட்டங்கள்**

கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் பாடம் சாராச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு, வகுப்பறைக் கற்றல் வாய்ப்புக்கு அப்பாற்பட்ட கற்றல் அனுபவங்களை வழங்கும் சிறப்புச் செறிவூட்டல் திட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

இம்முன்னெடுப்புகள் திறமைகளை ஏற்றுக்கொள்வதுடன், தனித்திறன்களை ஊக்குவித்து, மாணவர்களின் உலகப் பார்வையை விரிவுபடுத்தி, தலைமைத்துவம், தன்னம்பிக்கை போன்ற உயர்ந்த இலக்குகளை அடைய உதவுகின்றன.

**வெளிநாட்டுக் கல்விச் சுற்றுப்பயணத் திட்டம் மூலம்** கல்வி, விளையாட்டு, நுண்கலை, இலக்கியம் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு ஆண்டுதோறும் **வெளிநாடுகளுக்குக் கல்விச் சுற்றுப்பயண** ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் **6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 150 மாணவர்கள்**, ஆசிரியர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் வெளிநாட்டுக் கல்விப் பயணத்தில் பங்கேற்கின்றனர். ஆண்டுக்கு **₹3 கோடி** செலவில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் இதுவரை **450 மாணவர்கள்**, மொத்தம் **₹9 கோடி** செலவில் பயனடைந்து, உலகளாவிய பார்வையையும் கற்றல் அனுபவங்களையும் பெற்றுள்ளனர்.

மலைப்பகுதிகளில் கோடை காலத்தில் அரசுப் பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்படும் உண்டு–உறைவிட முகாம் **கோடைக்கொண்டாட்டம்** ஆகும். இத்திட்டம் தலைமைத்துவம், ஆளுமை மேம்பாடு, பண்பாட்டு விழிப்புணர்வு மற்றும் எதிர்கால இலக்குகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. ஆண்டுக்கு **₹50 இலட்சம்** செலவில் நடைபெறும் இத்திட்டத்தின் மூலம் இதுவரை **3,600 மாணவர்கள்**, மொத்தம் **₹2 கோடி** செலவில் பயனடைந்துள்ளனர். மேலும், கோடை விடுமுறையில் பயனுள்ள கற்றல் அனுபவங்களையும் இத்திட்டம் வழங்குகிறது.

### 3.7 தொழில் வழிகாட்டல் மற்றும் உயர்கல்வி மேம்பாடு

பள்ளியிலிருந்து உயர்கல்விக்கான மாற்றத்தை எளிதாக்கும் வகையில், தொழில் வழிகாட்டல் மற்றும் வழிகாட்டித் (Mentoring) திட்டங்களுக்கும் பள்ளிக் கல்வி இயக்ககம் முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதன் விளைவாக, கடந்த மூன்று கல்வியாண்டுகளில் அரசுப்பள்ளி மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை

விகிதம் **71 விழுக்காட்டிலிருந்து 95 விழுக்காடாக** உயர்ந்துள்ளது. **9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 49 இலட்சம் மாணவர்கள்,** தொழில் வழிகாட்டல் திட்டங்களால் பயனடைந்துள்ளனர். மேலும், **10,000 சிறப்பு ஆசிரிய ஆலோசகர்கள்** தொடர்ச்சியான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்கப் பயிற்சி பெற்றுள்ளனர். இதனுடன் **50,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கும்** இப்பணிக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அண்மை ஆண்டுகளில் **1,364க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளி மாணவர்கள்** நாட்டின் முன்னனி உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர். மேலும், உயர்கல்வி பயிலும் தகுதியுள்ள அரசுப்பள்ளி மாணவர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கப்படுவதன் மூலம், குறிப்பாக, முதல் தலைமுறை கற்போர் மற்றும் சமூக–பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

## 3.8 மாணவர்களுக்கான கற்றல் துணைப் பொருள்கள்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, விரிவான கற்றல் துணைப் பொருள்களின் தொகுப்பு வழங்கப்படுகிறது. இவை வகுப்பறைக் கற்றலில் மாணவர்கள் முழுமையாகப் பங்கேற்பதை உறுதிசெய்து, கற்றல், கற்பித்தல் செயல்முறையை வலுப்படுத்துவதோடு, தேவையான கல்வி வளங்கள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வழிவகை செய்கின்றன. மேலும், பள்ளியில் வருகையை அதிகரிக்கவும், இடைநிற்றலைக் குறைக்கவும், பள்ளிக் கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்யவும் நிதியுதவி மற்றும் போக்குவரத்து வசதிகளும் வழங்கப்படுகின்றன.

| வ. எண் | நலத்திட்டங்கள் | வகுப்புகள் | பயனாளிகள் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பாடநூல்கள் | 1–12 | 39.85 |
| 2 | நோட்டுப்புத்தகம் | 1–10 | 27.40 |
| 3 | புத்தகப்பை | 1–12 | 36.43 |
| 4 | காலணிகள் | 1–5 | 0.20 |

| | | | |
|---|---|---|---|
| 5 | காலேந்திகள் மற்றும் காலுறைகள் | 6 –10 | 24.69 |
| 6 | புவியியல் வரைபடம் | 6–10 | 4.77 |
| 7 | வண்ணக்குச்சிகள் | 1–2 | 0.06 |
| 8 | வண்ணப்பென்சில் | 3 – 5 | 0.13 |
| 9 | கணித உபகரணப்பெட்டி | 6 & 9 | 9.76 |
| 10 | சிறப்பு ஊக்கத்தொகை | 10–12 | 4.24 |
| 11 | சீருடை (நான்கு இணைகள்) | 1–8 | 6.76 |
| 12 | மிதிவண்டி | 11 | 5.40 |
| 13 | கம்பளிச்சட்டை, உறை காலணிகள் (மலைப்பிரதேசத்தில் மதிய உணவு உண்ணும் மாணவர்களுக்கு மட்டும்) | 1–8 | 0.38 |
| 14 | மழையாடைகள், பூட்ஸ்கள், காலுறைகள் (மலைப் பிரதேச மாணவர்களுக்கு மட்டும்) | 1–8 | 0.38 |
| 15 | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் | 1–10 | 12.34 |
| 16 | பேருந்து பயண அட்டை | 1–12 | 20.34 |

இந்தத் திட்டங்கள் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைப்பதுடன், மாணவர்களின் பள்ளி வருகையை ஊக்குவித்து, இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்ய உதவுகின்றன.

### 3.9. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்

பொருளாதாரச் சூழல் காரணமாக எந்தவொரு குழந்தையும் கல்வியிலிருந்து விலகிவிடக் கூடாது என்ற உறுதியுடன், அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காகப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மாணவர்களின் ஊட்டச்சத்து நிலை மேம்படுத்தப்படுவதுடன், பள்ளி வருகை ஊக்குவிக்கப்பட்டு, கற்றல் மற்றும் முழுமையான வளர்ச்சிக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

## 3.10. பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத்திட்டம்

மாணவர்களின் பள்ளி நாளானது, சத்தான உணவுடனும், கற்றலுக்குத் தேவையான ஆற்றலுடனும் தொடங்குவதை உறுதிசெய்யும் வகையில், தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத்திட்டத்தின் வாயிலாக உணவு வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு கல்வி ஆண்டில் இத்திட்டம் 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இத்திட்டம், மாணவர்களின் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவு செய்வதுடன், அவர்களின் கல்வி மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை உருவாக்குகிறது.

## 3.11. பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு

தரமான கல்வியை வழங்கவும், கற்றல்–கற்பித்தலுக்கான சூழலை உருவாக்கவும் பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்ட பள்ளிச்சூழல் இன்றியமையாததாகும். ஆகவே, பள்ளிக் கல்வி இயக்ககம் வகுப்பறைகள், ஆய்வகங்கள், சுகாதார வசதி, குடிநீர் வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

**பள்ளி உட்கட்டமைப்புப் பணிகள்**

| உட்கட்டமைப்புக் கூறு | மொத்தப் பணிகள் | நிறைவு பெற்றவை | நடைபெற்று வருபவை |
|---|---|---|---|
| வகுப்பறைகள் | 9,334 | 4,898 | 4,436 |
| ஆய்வகங்கள் | 180 | 117 | 63 |
| கழிப்பறைக் கட்டடங்கள் | 663 | 221 | 442 |
| குடிநீர் வசதிகள் | 132 | 44 | 88 |
| சுற்றுச்சுவர் (மீட்டர்) | 24,041 | 3,712 | 20,329 |

| உட்கட்டமைப்புக் கூறு | மொத்தப் பணிகள் | நிறைவு பெற்றவை | நடைபெற்று வருபவை |
|---|---|---|---|
| மாணவர் விடுதிகள் | 4 | 4 | – |
| மாணவியர் விடுதிகள் | 5 | 4 | 1 |
| **நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)** | 2,683.35 | 1,314.48 | 1,205.56 |

இம்முன்னெடுப்புகள், கற்றல் சூழலை மேம்படுத்துவதோடு, மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்து, அரசுப்பள்ளிகளில் கல்வித் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்குத் துணைபுரிகின்றன.

## 3.12 தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய பள்ளி உட்கட்டமைப்பு

தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய உட்கட்டமைப்பு, நவீனப் பள்ளிக் கல்வியின் இன்றியமையாத அங்கமாக உருவெடுத்துள்ளது. இது வகுப்பறைக் கற்பித்தலை மேம்படுத்துவதோடு, மாணவர்களின் மின்னுரு கற்றல் வளங்களுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துகிறது. **திறன் வகுப்பறைகள்**

மற்றும் **உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi–Tech Laboratories)**, இடைவினையாற்றும் கற்றல், கற்பித்தல் முறைகளை ஊக்குவித்து, மாணவர்களின் மின்னுரு திறன்களை வலுப்படுத்துவதோடு, ஆசிரியர்கள் தொழில்நுட்பத்தை வகுப்பறைக் கற்பித்தலுடன் திறம்பட ஒருங்கிணைக்க உதவுகின்றன.

## தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

| முன்னெடுப்புகள் | நிறைவு பெற்றவை | செலவினம் (கோடி) |
|---|---|---|
| உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் | 8,209 | ₹519.73 |
| திறன் வகுப்பறைகள் | 21,984 பள்ளிகளில் 22,931 வகுப்பறைகள் | ₹455.32 |
| கூடுதல் திறன் வகுப்பறைகள் | 1,750 | ₹33.25 |
| அரசு உதவிபெறும் பள்ளிகளின் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் | 654 (முன்மொழிவு) | ₹41.86 |

திறன் வகுப்பறைகள் மற்றும் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்பட்டதன் மூலம், தொழில்நுட்ப உதவியுடன் கற்பித்தல், வகுப்பறைச் செயல்பாடுகள் மற்றும் மின்னுரு கல்வி உள்ளடக்கங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் ஆகியனவற்றின் மூலம் கற்றல் சூழல் மாற்றமடைந்துள்ளது.

**(அ) மின்னுரு கற்றல் தளம்**

கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் மின்னுரு கற்றல் முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசின் **மணற்கேணி (Manarkeni)** மின்னுரு கற்றல் தளம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பாடத்திட்டத்துடன் இணைந்த மின்னுரு கற்றல் வளங்களை வழங்குகிறது. இவை வகுப்பறைக் கற்பித்தல், பொதுத்தேர்வுக்கான தயாரிப்பு, போட்டித் தேர்வுக்கான பயிற்சி, குறைதீர்க் கற்றல் மற்றும் ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டிற்கு உதவுகின்றன.

தற்போது இத்தளம் **30 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளர்களுக்குச்** சேவைகளை வழங்குகிறது. இதில், 13,000 கற்றல் காணொலிகள், 2.5 இலட்சம் பயிற்சி வினாக்கள், 5,800 கற்றல் வளங்கள் உள்ளன. எந்நேரமும், எங்கிருந்தும் தரமான மின்னுரு கல்வி உள்ளடக்கங்களை மாணவர்களும் ஆசிரியர்களும் அணுகும் வகையில் மணற்கேணி தளமானது, அரசுப் பள்ளிகளில் ஒருங்கிணைந்த கற்றல் (Blended Learning) மற்றும் மின்னுரு கற்பித்தல் முறைகளைக் குறிப்பிடத்தக்க அளவில் வலுப்படுத்தியுள்ளது.

### 3.13 பள்ளி மற்றும் சமூகப் பங்கேற்பு

பெற்றோர், ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சமூகத்தின் செயல்திறன்மிக்க பங்கேற்பு, பள்ளி நிருவாகத்தை வலுப்படுத்தவும் கல்வி விளைவுகளை மேம்படுத்தவும் இன்றியமையாததாகும். பள்ளி மேம்பாட்டு நடவடிக்கைகளில் சமூக உரிமை உணர்வையும், பங்குதாரர்களின் பங்களிப்பையும் ஊக்குவிப்பதன் மூலம், பள்ளிக் கல்வி இயக்ககம்

கூட்டாண்மை அடிப்படையிலான பள்ளி நிருவாகத்தை முன்னெடுத்து வருகிறது. இந்தக் கூட்டாண்மைகள் பொறுப்புணர்வை அதிகரித்து, பள்ளிகளின் செயல்திறனை மேம்படுத்தி, அரசுப் பள்ளிகளின்மீது பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளன.

**(அ) பள்ளி மேலாண்மைக் குழுக்கள்**

**பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (SMCs)**, பங்கேற்பு முறையில் பள்ளி நிருவாகத்தை வலுப்படுத்துவதிலும், பள்ளி வளர்ச்சியில் சமூகப் பங்கேற்பை உறுதிசெய்வதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மாநிலம் முழுவதும் **37,466 அரசுப் பள்ளிகளில்** சுமார் **8.4 இலட்சம் உறுப்பினர்களைக்** கொண்ட பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இவை பள்ளித் திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு உதவிபுரிகின்றன.

**TNSED Parent App** மூலம் பள்ளி மேலாண்மைக் குழுக்களின் தீர்மானங்கள் மின்னுரு முறையில் கண்காணிக்கப்படுகின்றன. மேலும், பள்ளிகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையேயான தகவல் பரிமாற்றமும் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதனுடன், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் நடைபெறும் **மாவட்ட கல்வி ஆய்வுக் கூட்டங்கள் (District Education Review – DER)** மூலம் மாவட்ட அளவில் கல்வித் திட்டங்கள் ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்யப்பட்டு திறம்படச் செயல்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான மீள் ஆய்வுச் செயல்பாடுகளின் மூலம் பள்ளி மேலாண்மைக் குழுக்களால் **2,28,397 தீர்மானங்கள்** நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றுள் **1,60,554 தீர்மானங்கள் (70.3%)** வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன. இது, பங்கேற்பு அடிப்படையிலான பள்ளி நிருவாகத்தின் செயல்திறனை வெளிப்படுத்துகிறது.

**(ஆ) நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி**

**நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NSNOP)** திட்டம், முன்னாள் மாணவர்கள், தொண்டு நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள் மற்றும் உள்ளூர்ச் சமூகத்தின் நிதி மற்றும் தன்னார்வ ஆதரவை ஒருங்கிணைத்து, அரசுப் பள்ளிகளின் வளர்ச்சியில் பள்ளி–சமூகக் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துகிறது.

**2022–23 முதல் 2025–26 வரை**, **₹1,000.96 கோடி** மதிப்பிலான பங்களிப்புகள் பெறப்பட்டுள்ளன. இதன்மூலம், **758 அரசுப் பள்ளிகளில் பயிலும் 69,137 மாணவர்கள்** பயனடைந்துள்ளனர். இந்த முயற்சி பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு, கற்றல் வளங்கள் மற்றும் பல புதுமையான கல்வி முன்னெடுப்புகள் மூலம் பொதுக்கல்வி மேம்பாட்டில் சமூகப் பங்கேற்பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளது.

## 3.14 மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகைகள்

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களை ஊக்குவிக்கவும், தொடர்ச்சியான கற்றலுக்கு உதவி புரியவும் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கவும் பல்வேறு கல்வி உதவித்தொகை மற்றும் மாணவர் முன்னேற்றத் திட்டங்களைப் பள்ளிக் கல்வி இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் கல்விச் சமத்துவத்தை ஊக்குவிப்பதோடு, மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கவும், உயர்கல்விக்கான பொருளாதாரத் தடைகளைக் குறைக்கவும் உதவுகின்றன.

### (அ) கல்வி உதவித்தொகை மற்றும் திறன்தேடல் திட்டங்கள்

மாணவர்களின் கல்வித் திறமையை அங்கீகரித்து, உயர்கல்வியைத் தொடர்வதை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு உதவித்தொகைகள் மற்றும் திறன்தேடல் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இவற்றில், **தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு (CMTSE)** – 1,000 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குகிறது. **தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வு (TRUST)** – கிராமப்புற மாணவர்களின் திறமைகளை அடையாளம் காண்கிறது. **தேசிய வருவாய்வழி மற்றும் திறன்சார் கல்வி உதவித்தொகை (NMMS)** மூலம் ஆண்டுதோறும் 6,695 மாணவர்கள் பயனடைகின்றனர். **தமிழ் இலக்கியத் திறனறித் தேர்வு (TLLAT)** – தமிழ் மொழித் திறனை ஊக்குவிக்கிறது. இத்திட்டங்கள் மாணவர்களின் கல்விச் சாதனைகளை அங்கீகரிப்பதோடு, உயர்கல்வியைத் தொடரவும் அவர்கள் தம் முழுத் திறனையும் அறிந்துகொள்ளவும் ஊக்குவிக்கின்றன.

**(ஆ) குடும்பத்தின் முதன்மை வருவாய் ஈட்டுநர் இழப்பீட்டுத் திட்டம் (Breadwinner Scheme)**

குடும்பத்தின் முதன்மை வருவாய் ஈட்டும் பெற்றோர், விபத்தில் உயிரிழக்கவோ அல்லது நிரந்தர

மாற்றுத் திறனாளியாகவோ மாறும் சூழலில், மாணவர்களின் கல்வி இடையூறு இல்லாமல் தொடரும் வகையில் நிரந்தர வைப்பு (Fixed Deposit) மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம், கடினமான சூழ்நிலைகளிலும் மாணவர்கள் தங்கள் கல்வியை இடர்ப்பாடுகளின்றித் தொடர்வதை உறுதிசெய்கிறது.

### 3.15 தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள்

தமிழ்நாடு மாதிரி உண்டு–உறைவிடப் பள்ளிகள் (Tamil Nadu Model Residential Schools), உயர்தரக் கல்வி வழங்கும் கல்விக்கான சிறப்பு மையங்களாக உருவெடுத்துள்ளன. இப்பள்ளிகள், அரசுப்பள்ளி மாணவர்கள் தேசிய அளவில் போட்டியிடும் திறனைப் பெறும்வகையில் புதுமையான கற்றல், கற்பித்தல் முறைகள், மேம்படுத்தப்பட்ட கல்வி உதவி மற்றும் உயர்ந்த கல்வி இலக்குகளை வளர்க்கும் சூழலை வழங்குகின்றன.

கடந்த நான்கு கல்வியாண்டுகளில், **2,360 அரசுப் பள்ளி மாணவர்கள்**, இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (IIT), தேசியத் தொழில்நுட்பக் கழகங்கள் (NIT), தேசியச் சட்டப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பொறியியல், வடிவமைப்பு, வேளாண்மை, விமானப் போக்குவரத்து, விடுதி மேலாண்மை, கடல்சார் கல்வி மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளின் முன்னனி உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர். இவ்வாறான சாதனைகள் அரசுப்பள்ளி மாணவர்களின் கல்வி இலக்குகள், தன்னம்பிக்கை மற்றும் திறன்கள் வளர்ந்து வருவதை வெளிப்படுத்துவதுடன் மாணவர்கள் தங்கள் படிப்பைத் தடையின்றித் தொடரவும் வழிவகை செய்கிறது.

### 3.16 முடிவுரை

இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை வலுப்படுத்தும் நோக்கில், பொதுக்கல்வி, தொழிற்கல்வி, உள்ளடக்கிய கல்வி மற்றும் மாணவர்

மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைந்த முறையில் பள்ளிக் கல்வி இயக்ககம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. கற்றல், கற்பித்தல் தரத்தை உயர்த்துதல், மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை ஊக்குவித்தல், பள்ளி–சமூகக் கூட்டாண்மையை வலுப்படுத்துதல் மற்றும் விரிவான மாணவர் உதவித் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றின் மூலம், ஒவ்வொரு மாணவரும் கற்கவும், பங்கேற்கவும், சிறந்து விளங்கவும் ஏதுவான கல்விச் சூழலை இயக்ககம் உருவாக்கி வருகிறது.

பள்ளி உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம் சார்ந்த கற்றல், கல்வி உதவித்தொகைகள், தொழில் வழிகாட்டல் மற்றும் உயர்கல்விக்கான வழிக்காட்டல் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முதலீடுகள், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வியைத் தொடரவும், வேலைவாய்ப்பிற்குத் தேவையான திறன்களைப் பெறவும், தங்களது கனவுகளை நனவாக்கவும் புதிய வாய்ப்புகளை

உருவாக்கியுள்ளன. இந்த ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம், சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கத் தயாரான, தன்னம்பிக்கைமிக்க, திறமையான மற்றும் சமூகப் பொறுப்புள்ள இளம் குடிமக்களை உருவாக்கும் பணியைப் பள்ளிக் கல்வி இயக்ககம் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

# அத்தியாயம் – IV

# ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

## 4.1 அறிமுகம்

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி** என்பது முன்பருவக் கல்வி முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை பள்ளிக்கல்வியின் அனைத்து நிலைகளுக்கும் உறுதுணையளிக்கும் ஒருங்கிணைந்த திட்டமாகும். இத்திட்டமானது, தொடக்கக் கல்வி இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) ஆகியவற்றின் கல்வி சார்ந்த முன்னெடுப்புகளுக்குத் துணைபுரிவதோடு அனைவருக்கும் தரமான கல்வியை உறுதிசெய்தல், அடிப்படைக் கற்றலை வலுப்படுத்துதல், சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய கல்வியை மேம்படுத்துதல், கற்றல் அடைவுகளை செம்மைப்படுத்துதல், தொழிற்கல்வியை விரிவுபடுத்துதல் ஆகியனவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

## 4.2 ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் முக்கியக் கூறுகள்

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு:

- கல்விசார் செயல்பாடுகள் மற்றும் கற்றல் மேம்பாடு
- கல்வி பெறுவதற்கான வாய்ப்பு, சமத்துவம் மற்றும் மாணவர்களைத் தக்கவைத்தல்
- கல்வி உரிமைச் சட்ட (RTE) வாய்ப்புகளைச் செயல்படுத்துதல்
- உள்ளடக்கிய கல்வி (Inclusive Education) மற்றும் மாணவர் நலன்
- பள்ளி நிருவாகம் மற்றும் சமூகப் பங்கேற்பு
- தமிழ்நாடு கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு (TN EMIS)
- ஆசிரியர் திறன் மேம்பாடு மற்றும் பள்ளிகளை வலுப்படுத்துதல்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம் என்பது, மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் 60 : 40 என்ற நிதிப் பங்கீட்டு விகிதத்தில் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய திட்டமாகும். எனினும், PM SHRI பள்ளிகள் திட்டத்தைச் செயல்படுத்துதல், அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையொப்பமிடுதல் மற்றும் தேசியக் கல்விக் கொள்கை (NEP), 2020–ஐ நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி நிதி விடுவிப்புடன் தொடர்புபடுத்தி, **2024–25**ஆம் நிதியாண்டு முதல் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்திற்கான மத்திய அரசின் நிதி விடுவிக்கப்படவில்லை.

**விடுவிக்கப்பட வேண்டிய நிலுவை நிதி விவரங்கள்:**

| **நிதியாண்டு** | **நிலுவையில் உள்ள மத்திய அரசின் நிதிப் பங்கு** |
|---|---|
| 2024–25 | ரூ. 1,788.79 கோடி |
| 2025–26 | ரூ. 1,496.04 கோடி |
| 2026–27 | ரூ. 1,825.09 கோடி |
| **மொத்தம்** | **ரூ. 5,109.92 கோடி** |

இந்நிலையில், நிலுவையில் உள்ள மத்திய அரசின் நிதியை விடுவிக்கும் உத்தரவினைப் பிறப்பிக்க, தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது. இதனைத் தொடர்ந்து, 2024–25 மற்றும் 2025–26ஆம் ஆண்டுகளுக்கான கல்வி உரிமைச் சட்ட (RTE) வாய்ப்புகளைச் செயல்படுத்துவதற்கான மத்திய அரசின் பங்காக ரூ. 713.99 கோடி மட்டும் மத்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் பிற கூறுகளுக்கான நிதி இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இவ்வரசு பொறுப்பேற்ற உடனேயே, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட நிதி விடுவிப்பை வேறு எந்தத் திட்டத்துடனும் தொடர்புபடுத்தக் கூடாது என்று வலியுறுத்தி, நிலுவையில் உள்ள மத்திய அரசின் நிதிப்பங்கை உடனடியாக விடுவிக்குமாறு மத்திய அரசிடம் மீண்டும் கோரியது. மேலும், இருமொழிக் கொள்கை உள்ளிட்ட

தமிழ்நாட்டின் நீண்டகாலக் கல்விக் கொள்கைகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதில் தமிழ்நாடு அரசு தனது நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

மத்திய அரசின் நிலுவையில் உள்ள நிதி இன்னும் விடுவிக்கப்படாத நிலையில், தமிழ்நாடு அரசு தன்னுடைய மாநில நிதி ஆதாரங்களின் மூலம் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் அனைத்து முக்கியத் திட்டங்களும் தடையின்றிச் செயல்படுவதை உறுதி செய்துள்ளது. 2024-25 மற்றும் **2025-26**ஆம் நிதியாண்டுகளில் மாநில அரசு ரூ. 2,014.63 கோடி செலவிட்டதுடன், **2026-27**ஆம் நிதியாண்டிற்கான மாநில அரசின் இடைக்கால நிதியாக, முதல் மற்றும் இரண்டாம் தவணை ரூ. 647.38 கோடி விடுவித்துள்ளது. இதன் விளைவாகக் கல்விசார் திட்டங்கள், உண்டு-உறைவிடப் பள்ளிகள், உள்ளடக்கிய கல்வித் திட்ட முன்னெடுப்புகள், தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள், பள்ளி

நிருவாக நடவடிக்கைகள் மற்றும் மின்னுரு (digital) கல்வி மேலாண்மை அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து முக்கியத் திட்டங்களும் எவ்வித இடையூறுமின்றி, தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.3 கல்விசார் செயல்பாடு மற்றும் கற்றல் மேம்பாடு

பள்ளிக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்தும் நோக்கில், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி பல்வேறு கல்விசார் முன்னெடுப்புகளை விரிவாக மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, **அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் (BLN)** திறன்களை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. புரிந்து வாசித்தல், திறம்பட எழுதுதல் மற்றும் அடிப்படைக் கணிதச் செயல்பாடுகளை மேற்கொள்ளும் திறன்களே எதிர்காலக் கற்றலுக்கான அடித்தளமாக அமையும் என்பதை உணர்ந்து, திறனடிப்படையிலான கற்றல்,

குழந்தை மையக் கற்பித்தல் முறைகள் மற்றும் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் வயதுக்கேற்ற கற்றல் திறன்களை அடைய உதவும் கட்டமைக்கப்பட்ட கல்விசார் செயல்பாடுகளை இத்திட்டம் வகுப்பறைக் கற்பித்தலுடன் ஒருங்கிணைத்து வழங்கி வருகிறது.

2025–26ஆம் ஆண்டில், திறன் (THIRAN) திட்டத்தின்கீழ், **ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு** வரை இலக்கு அடிப்படையிலான மீள்கற்றலுக்காக அடையாளம் காணப்பட்ட 7.4 இலட்சம் மாணவர்களுள், 7 இலட்சம் மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட **அடிப்படைக் கற்றல் அடைவுகளை (BLOs)** எட்டியுள்ளனர்.

### 4.4 பாட இணைச் செயல்பாடுகள்

#### அ) மாபெரும் வாசிப்பு இயக்கம்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வயதுக்கேற்ற வாசிப்புப்

புத்தகங்களை வழங்குவதன் மூலம், அவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கி, மொழித் திறனை மேம்படுத்துவதே **மாபெரும் வாசிப்பு இயக்கத்தின்** நோக்கமாகும். இம்முன்னெடுப்பு, தாமாகவே வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதுடன், சொற்களஞ்சியத்தை விரிவுபடுத்தி, வாசித்துப் புரிந்து கொள்ளும் திறனை மேம்படுத்தி, வாழ்நாள் முழுவதும் வாசிப்பின் மீது ஆர்வத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், **174 தமிழ் நூல்களும் 87 ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களும்** மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு, சுமார் **45 இலட்சம் மாணவர்கள்** பயனடைந்து வருகின்றனர். **2026–27**ஆம் ஆண்டில், பள்ளி நூலகங்களை மேலும் வலுப்படுத்தவும், மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தவும் கூடுதலாக **76 புதிய நூல்கள்** அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

**ஆ) கலைத்திருவிழா**

**கலைத்திருவிழா** என்பது மாணவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சியை ஊக்குவிக்கும் மாநில அளவிலான திட்டமாகும். இத்திட்டமானது பள்ளி, வட்டாரம், மாவட்டம், மாநிலம் என்று பல்வேறு நிலைகளில் நடத்தப்பட்டு, இலக்கியம், கலை மற்றும் பண்பாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்கும் வாய்ப்பை வழங்குவதன் வாயிலாகப் படைப்பாற்றல், உரையாடல் திறன், குழு மனப்பான்மை, தலைமைத்துவப் பண்புகள் ஆகியவற்றையும் தமிழ்மொழி, கலை மற்றும் பண்பாட்டின் மீதான மதிப்புணர்வையும் வளர்க்கிறது.

2025–26ஆம் ஆண்டில், பள்ளி அளவிலான போட்டிகளில் சுமார் **49.05 இலட்சம் மாணவர்கள்** பங்கேற்றனர். இப்பங்கேற்பு, அனைத்து நிலைகளிலும் மாணவர்களின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் இத்திட்டம் அனைவரையும் சென்று

அடைந்துள்ளதையும் வெளிப்படுத்துகிறது. 2026–27ஆம் ஆண்டிலும், **ரூ. 5.35 கோடி** நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் வாயிலாக மாணவர்கள் தமது தனித்திறமைகளை வெளிப்படுத்தவும், வகுப்பறைக்கு அப்பாற்பட்ட தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் ஊக்குவிக்கப்படுவர்.

### 4.5 கல்வி பெறுவதற்கான வாய்ப்பு, சமத்துவம் மற்றும் மாணவர்களைத் தக்கவைத்தல்

ஒவ்வொரு குழந்தையும் தரமான கல்வியைப் பெற்று, இடையூறின்றி பள்ளிக் கல்வியைத் தொடர்வதை உறுதிசெய்வது ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டங்கள், குறிப்பாக பின்தங்கிய, சமூக மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் வாழிடம் சார்ந்த தடைகளின்றி கல்வி வாய்ப்பை வழங்குதல், பள்ளியில்

குழந்தைகளைத் தக்கவைத்தல், கல்விச் சமத்துவத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை உறுதிசெய்கிறது.

**அ) பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகளுக்கான உண்டு–உறைவிடப் பள்ளிகள்**

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியானது, தொலைதூரக் குடியிருப்புகள், நகர்ப்புற வறுமைப் பகுதிகள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் குடும்பத்தின் உறுதுணை இல்லாத குழந்தைகள் பாதுகாப்பான, ஆதரவான கற்றல் சூழலில் கல்வி பெறும்வகையில் உறைவிடப் பள்ளி வசதிகளை வழங்குகிறது.

**நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவிஷ்ய வித்யாலயா (NSCBAV)** திட்டம், **11 மாவட்டங்களில் செயல்படும் 15 உண்டு–உறைவிடப் பள்ளிகள்** மற்றும் **4 மாவட்டங்களில் செயல்படும் 4 மாணவர் விடுதிகள்** வாயிலாக, **முதலாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை** பயிலும் மாணவர்களுக்குப் பயனளிக்கிறது. இத்திட்டத்தில் **2026–27**ஆம்

ஆண்டில், **ரூ.15.80 கோடி** நிதி ஒதுக்கீட்டின் மூலம் **1,500 மாணவர்கள்** பயனடைவார்கள்.

**கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV)** திட்டத்தின்கீழ், கல்வியில் பின்தங்கிய **15 மாவட்டங்களில்** செயல்பட்டு வரும் **61 உண்டு–உறைவிடப் பள்ளிகள்** மற்றும் **44 மாணவியர் விடுதிகள்** வாயிலாக, நலிவடைந்த சமூகங்களைச் சேர்ந்த மாணவிகளுக்குக் கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் **2026–27**ஆம் ஆண்டில், **ரூ. 79.41 கோடி** நிதி ஒதுக்கீட்டின் மூலம் **9,850 மாணவிகள்** பயனடைவார்கள். இதனால் மாணவிகளின் சேர்க்கை, தக்கவைத்தல் மற்றும் கல்விச் சமத்துவம் ஆகியவை பள்ளியில் தொடர்ந்து மேம்படுத்தப்படுகிறது.

**ஆ) போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் (Escort) வசதி**

தமிழ்நாடு இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் 2011இன்படி பள்ளி வசதி இல்லாத

பரவலான மக்கள்தொகை கொண்ட தொலைதூர/அடர்ந்த காடு/ மலைக் குடியிருப்புகளில் உள்ள மாணவர்கள் இடைநிற்றலின்றி கல்வியைத் தொடர்வதற்கு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின்கீழ் **போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் (Escort) வசதிகள்** வழங்கப்படுகின்றன. இவ்வசதி, மாணவர்கள் பள்ளிக்குத் தொடர்ந்து வருகை புரிந்து, தமது கல்வியை இடையூறின்றி நிறைவு செய்வதை உறுதிசெய்கிறது.

2026-27ஆம் ஆண்டில், 29 **மாவட்டங்களில்** உள்ள **2,606 குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்த 39,564 தொடக்கநிலை மாணவர்களும்**, **424 குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்த 3,715 உயர்நிலை மாணவர்களும்**, **ரூ. 26.02 கோடி** நிதி ஒதுக்கீட்டின் வாயிலாகப் பயன்பெறுகின்றனர். இத்தகைய இடைவினைச் செயல்பாடுகள், கல்வி பெறுவதற்கான வாய்ப்பை மேம்படுத்துவதோடு, புவியியல் காரணிகளால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் குறைக்கின்றன.

## 4.6 உள்ளடக்கிய கல்வி மற்றும் மாணவர் நலன்

உடல், சமூக அல்லது மொழிப் பின்னணி எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு குழந்தைக்கும் சமமான மற்றும் தரமான கல்வி கிடைப்பதை உறுதிசெய்வதில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உறுதி பூண்டுள்ளது. சிறப்புக் கல்வி, மொழிசார் இடைவினைச் செயல்பாடுகள் மற்றும் ஆலோசனை சேவைகள் ஆகியவற்றால், இத்திட்டம் அனைவருக்குமான உள்ளடக்கிய கல்வியை ஊக்குவிப்பதோடு, கற்றலின் தொடர்ச்சியையும் மாணவர்களின் ஒட்டுமொத்த நலனையும் மேம்படுத்தி, பள்ளிக் கல்வியில் அவர்கள் முழுமையாகப் பங்கேற்கும் சூழலை உருவாக்குகிறது.

**அ) சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான கல்வி**

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளைத் (CWSN) தொடக்க நிலையிலேயே அடையாளம்

காணுதல், சிகிச்சை சார்ந்த முன்னெடுப்புகள், உதவி உபகரணங்கள், போக்குவரத்து வசதி மற்றும் தனிப்பட்ட கல்வித் திட்டங்கள் (IEPs) ஆகியவற்றின் வாயிலாக, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டமானது முழுமையான கல்வி வாய்ப்பை வழங்குகிறது. **நலம் நாடி செயலி** போன்ற தொழில்நுட்ப அடிப்படையிலான முயற்சிகள் குழந்தைகளைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, உரிய பயிற்சிகளை மேற்கொள்ள உதவுகின்றன. மேலும், பள்ளி ஆயத்த பயிற்சி மையங்கள், வீட்டுவழிக் கல்வி மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட கற்றல் வளங்கள் ஆகியவை பல்வேறு கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகள், தொடர்ந்து கல்வி கற்பதை உறுதி செய்கின்றன.

இத்தகைய இடைவினைச் செயல்பாடுகள், உள்ளடக்கிய வகுப்பறைச் சூழலை உருவாக்குவதோடு, ஒவ்வொரு குழந்தையும் தங்களது தனிப்பட்ட திறன்கள் மற்றும் தேவைகளுக்கேற்ப

கற்றுக்கொள்ளும் வாய்ப்புகளையும் வழங்குகின்றன. 2026–27ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதும் உள்ளடக்கிய கல்வித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக **ரூ.95.83 கோடி** நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆ) புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி**

**தமிழ்மொழி கற்போம்** திட்டத்தின் வாயிலாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள், தங்களது தாய்மொழியில் கல்வியைத் தொடர்வதோடு, தமிழையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்டம், அருகிலுள்ள பள்ளிகளில், அவர்கள் எளிதில் சேர்வதற்கு வழிவகுப்பதுடன், மொழி வேறுபாட்டால் ஏற்படும் கற்றல் தடைகளைக் குறைத்துத் தொடர்ந்து கற்பதை உறுதிசெய்கிறது.

2026–27ஆம் ஆண்டில், **ரூ.66.85 இலட்சம்** நிதி ஒதுக்கீட்டில், **16 மாவட்டங்களில்** செயல்படும் **81 சிறப்புப் பயிற்சி மையங்கள்** வாயிலாக **1,726 குழந்தைகள்** பயன்பெற்று வருகின்றனர்.

**இ) பள்ளிக் கல்வி உதவி மையம் – 14417**

**பள்ளிக் கல்வி உதவி மையம் – 14417**, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குக் கல்வி வழிகாட்டுதல், ஆலோசனை, குறைதீர்ச் சேவைகளை வழங்கி வருகிறது. **குழந்தைகள் பாதுகாப்பு உதவி எண்** 1098–உடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இச்சேவை, குழந்தைகள் பாதுகாப்பு, உளவியல் ஆலோசனை மற்றும் மாணவர் நலன் தொடர்பான பிரச்சினைகளுக்கு உரிய நேரத்தில் ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.

இந்த உதவி மையம், மாதமொன்றிற்குச் சுமார் **11,800 உள்வரும் அழைப்புகளையும் 87,600 வெளிச்செல்லும் அழைப்புகளையும்** கையாளுகிறது.

இதன் வாயிலாகப் பள்ளிகள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளிக் கல்வித்துறைக்கு இடையிலான தகவல்தொடர்பை வலுப்படுத்தும் எளிதில் அணுகக்கூடிய அமைப்பாகச் செயல்படுகிறது.

உள்ளடக்கிய கல்வி மற்றும் மாணவர் நலன் ஆகியவற்றில் தொடர்ந்து முக்கியத்துவம் அளிப்பதனால், பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்கல்வியில் ஆர்வமுடன் பங்கேற்கத் தேவையான அனைத்து வாய்ப்புகளையும் வழங்குவதை தமிழ்நாடு அரசு தொடர்ந்து உறுதிசெய்து வருகிறது.

### 4.7 பள்ளி ஆளுகை மற்றும் சமூகப் பங்கேற்பு

பள்ளிக்கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், கல்வி நிறுவனங்களின் செயல்திறனை வலுப்படுத்தவும், வலுவான பள்ளி ஆளுகையும் சமூகத்தின் செயல்மிகு பங்கேற்பும் இன்றியமையாதவை ஆகும்.

**பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (SMCs)** பள்ளி நிருவாகத்தில் சமூகப் பங்கேற்பை உறுதிசெய்யும் முக்கிய அமைப்பாகச் செயல்படுகின்றன. பெற்றோர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்துடன் அமைக்கப்படும் இக்குழுக்கள், பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல், பள்ளியின் செயல்பாடுகளைக் கண்காணித்தல், மாணவர்களின் வருகையை மேம்படுத்துதல் மற்றும் கல்வித் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

2026-27ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதும் உள்ள **37,539 அரசுப் பள்ளிகளில்** பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மறுகட்டமைக்கப்படவுள்ளன. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தொடர் குழுக் கூட்டங்கள் மற்றும் மின்னுரு கண்காணிப்புச் செயல்முறைகள் ஆகியவை பள்ளி நிருவாகத்தில் பங்கேற்பையும் வெளிப்படைத் தன்மையையும்

பொறுப்புணர்வுடன் செயல்படுவதையும் மேலும் வலுப்படுத்தும்.

## 4.8 தமிழ்நாடு கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு (TN EMIS)

**தமிழ்நாடு கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு (TN EMIS)** என்பது பள்ளிக் கல்விச் செயல்பாடுகளைத் திட்டமிடுதல், கண்காணித்தல் மற்றும் நிருவகித்தலுக்கான மாநிலத்தின் ஒருங்கிணைந்த மின்னுரு தளமாகும். முழுமையான கல்வி மேலாண்மை அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ள TN EMIS, மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிகள் மற்றும் கல்வித் திட்டங்கள் தொடர்பான நிகழ்நேரத் தகவல்களை வழங்குகிறது. இதன் வாயிலாகத் தரவுகளின் அடிப்படையிலான திட்டமிடல், திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துதல் மற்றும் மாநிலம் முழுவதும் கல்விக்கான முன்னெடுப்புகளைப் பயனுள்ள வகையில் கண்காணித்தல் சாத்தியமாகிறது.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகள் தொடர்பான விரிவான தரவுத்தளங்களின் மூலம் பள்ளிக் கல்வியின் முழுமையான மின்னுரு நிருவாகத்தை இத்தளம் வழங்குகிறது. மேலும், கல்விசார் கண்காணிப்பு, பள்ளி நிருவாகம், ஆசிரியர்களைப் பணியமர்த்தல், மாணவர் வருகைப்பதிவு கண்காணிப்பு மற்றும் திட்டச் செயல்பாடு ஆகியனவற்றையும் எளிதாக்குகிறது. இது மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பள்ளி நிலைகளில் பள்ளிக்கல்வித் துறையின் செயல்பாடுகளை நிகழ்நேரத்தில் கண்காணிக்கவும், பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்கவும், கற்றல் குறியீடுகளைத் தொடர்ந்து ஆராயவும், தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது.

## 4.9 ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வித் தகவல் அமைப்பு (UDISE+)

**ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வித் தகவல் அமைப்பு (UDISE+)** என்பது பள்ளிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி உள்கட்டமைப்பு தொடர்பான விரிவான தகவல்களைப் பதிவு செய்யும் தேசிய அளவிலான பள்ளிக் கல்வித் தரவுத்தளமாகும். தமிழ்நாட்டில், UDISE+ அமைப்பு, **தமிழ்நாடு கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்புடன் (TN EMIS)** ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால் மாநில மற்றும் தேசியத் தரவுத்தளங்களுக்கு இடையே தடையற்ற தகவல் பரிமாற்றம் சாத்தியமாகியுள்ளது.

இந்த ஒருங்கிணைப்பு நிகழ்நேரத் தரவு மேலாண்மையை எளிதாக்குவதோடு, கல்வி புள்ளிவிவரங்களின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துகிறது. மேலும், ஒரே தகவலை மீண்டும் மீண்டும் பதிவேற்றும் தேவையைக்

குறைத்து, தரவுகளின் அடிப்படையிலான திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் கொள்கை வடிவமைப்பிற்குத் துணைபுரிகிறது. கல்வி நிருவாகத்திற்கான ஒருங்கிணைந்த மின்னுரு தளத்தை வழங்குவதன் மூலம், பள்ளிக் கல்வித் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தவும் இது உதவுகிறது.

### 4.10 முடிவுரை

கல்வித் தரத்தை உயர்த்துதல், சமமான கல்வி வாய்ப்புகளை உறுதிசெய்தல், உள்ளடக்கிய கல்வியை மேம்படுத்துதல், மாணவர் நலனை வலுப்படுத்துதல், பள்ளி நிருவாகத்தை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கல்வி மேலாண்மையை முன்னேற்றுதல் ஆகியனவற்றின் வாயிலாகத் தமிழ்நாட்டில் கல்வி மேம்பாட்டிற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் முதன்மைத் திட்டமாக **ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி** உருவெடுத்துள்ளது. இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த

முன்னெடுப்புகள் வகுப்பறைக் கற்றலை வலுப்படுத்தி, நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்தி, பள்ளிக்கல்வியின் அனைத்து நிலைகளிலும் கல்வித்தரத்தை உயர்த்தியுள்ளன. கற்றலுக்கு உகந்த சூழலில் ஒவ்வொரு குழந்தைக்கும் எளிதில் அணுகும் வகையிலான, உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதி செய்வதற்கான தமிழ்நாடு அரசின் முன்னெடுப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி தொடர்ந்து உறுதுணையாக இருந்து வருகிறது.

# அத்தியாயம் V

# மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## 5.1 அறிமுகம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தமிழ்நாட்டுப் பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்தவும் கல்விசார் வழிகாட்டுதல்களை வழங்கவும் மிக முக்கியமான முதன்மை நிறுவனமாக விளங்குகிறது. பள்ளிக் கல்வித் துறையின் முக்கியக் கல்வி அமைப்பாகச் செயல்படும் இந்நிறுவனம், பள்ளிக் கல்விக்கான கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்கள், ஆசிரியர் கையேடுகள் மற்றும் பிற கற்றல் உபகரணங்களை உருவாக்கும் பணியைச் செய்து வருகிறது.

ஆசிரியர்களுக்காகத் திறன் பயிற்சி அளித்தல், புதுமையான கற்பித்தல் முறைகளைச் செயல்படுத்துதல், திறன் அடிப்படையிலான மதிப்பீட்டை வலுப்படுத்துதல், பள்ளிக் கல்விக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் கொள்கை முடிவுகளை எடுக்கத் தேவையான கல்வி சார்ந்த ஆலோசனைகளை வழங்குதல் ஆகியவற்றின்வழி பள்ளிக் கல்வித்துறை மற்றும் அதன் இயக்ககங்களுக்கு உறுதுணை செய்து வருகிறது. மாணவர்கள், பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு முழுமையான ஆதரவு அளித்து வகுப்பறைக் கற்பித்தலை மேம்படுத்தி மாணவர்களின் கற்றல் திறனை வளர்த்து எதிர்காலத்திற்கு ஏற்ற தரமான கல்வியை அனைவருக்கும் சமமாகக் கொண்டு சேர்க்கும் பணியினை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தொடர்ந்து செய்து வருகிறது.

## 5.2 கலைத்திட்டம் மற்றும் கற்றல் வளங்களை உருவாக்குதல்

கலைத்திட்டத்தைச் சீரமைப்பதன் வாயிலாக வலுவான கல்வியை நிலைநிறுத்தும் பொறுப்பினை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் செய்து வருகிறது. பள்ளிக் கல்வியானது, அனைவருக்கும் சமமானதாகவும் அனைவரையும் உள்ளடக்கியதாகவும் மாணவர்களின் திறனை வளர்ப்பதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காகக் கலைத்திட்டச் சீரமைப்பு, பாடத்திட்டம், பாடநூல்கள், ஆசிரியர் கையேடுகள் மற்றும் பிற கல்வி வளங்களை இந்நிறுவனம் தொடர்ந்து ஆய்வு செய்து மேம்படுத்தி வருகிறது. இவை ஆசிரியர்கள் வகுப்பறையில் எளிதாகக் கற்றுக்கொடுக்கவும், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கவும், அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொள்ளத் தேவையான அறிவு மற்றும் திறன்களைப் பெறவும் பெரிதும் உதவுகின்றன.

## அ) கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் உருவாக்கம்

பள்ளிக்கல்விக்கான தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025இன் அடிப்படையில், 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான பாடத்திட்டங்கள் மற்றும் பாடநூல்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் முழுமையாக மாற்றியமைத்து வருகிறது. கல்வியாளர்கள், துறைசார் வல்லுநர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஈடுபாடுடையோரைக் கலந்தாலோசித்து, படிப்படியாக இம்மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம், நமது மாநிலத்தின் கல்விக்கொள்கைக்கு மதிப்பளிக்கும் அதேவேளையில், தற்போதைய கல்வித் தேவைகளையும் இக்கலைத்திட்டம் நிறைவு செய்யும்.

முதற்கட்டமாக, 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான திருத்தப்பட்ட பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 1 முதல் 3 ஆம்

வகுப்புகளுக்கான முதல் பருவப் பாடநூல்கள் 2026–27 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பிற வகுப்புகளுக்கான பாடத்திட்டங்கள் மற்றும் பாடநூல்கள் அடுத்தடுத்த கட்டங்களில் படிப்படியாக மாற்றியமைக்கப்படும். மேலும், வகுப்பறைக் கற்பித்தல் சிறப்பாக நடைபெறவும், மாணவர்களின் கல்வித்திறன் மேம்படவும், பாடநூல்களுடன் முழுமையான ஆசிரியர் கையேடுகளும் கற்றல், கற்பித்தல் வளங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**ஆ) மறுசீரமைக்கப்பட்ட பாடநூல்கள்**

கலைத்திட்டச் சீரமைப்புகளின் ஒரு பகுதியாக, குழந்தைகள் மகிழ்ச்சியாகவும் எளிதாகவும் கற்றுக்கொள்ளும்வகையில் பள்ளிப் பாடநூல்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் புதிய முறையில் வடிவமைத்துள்ளது. குழந்தைகளின் வயதுக்கு ஏற்பவும், அவர்களின்

திறனை வளர்க்கும் வகையிலும் வளர்நிலையிலான கற்றல் இலக்குகள், எளிய மொழிநடை, குழந்தைகளை ஈர்க்கும் படங்கள் இணைக்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகள் அடிப்படையிலான கற்பித்தலை உள்ளடக்கிப் புதிய பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாகக் குழந்தைகள், எளிய நிலையில் தொடங்கி, கடினமான கருத்துகளைப் படிப்படியாகப் புரிந்து கற்க முடியும்.

மேலும், கதை சொல்லுதல், விளையாட்டுகள் மற்றும் அனுபவக் கற்றல் மூலமாக மாணவர்களிடம் படைப்பாற்றல், நற்பண்புகள், வாழ்க்கைத்திறன்கள் மற்றும் உடல் இயக்கத் திறன்கள் மேம்படுகின்றன. குழந்தைகள் தம்மைத்தாமே சுயபரிசோதனை செய்துகொள்ளவும், தொடர்ச்சியாகத் தங்களின் திறனை மதிப்பிடவும் குழந்தை மையக் கல்விமுறை மற்றும் திறனறி மதிப்பீடுகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. வகுப்பறைக் கற்பித்தல் சிறப்பாக நடைபெறவும், மாணவர்களின் ஈடுபாட்டையும் கற்றல் திறனையும் உயர்த்தவும், முழுமையான

ஆசிரியர் கையேடுகளும் விரைவுத் துலங்கல் குறியீட்டுடன் (QR Code) கூடிய மின்னுரு கற்றல் வளங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## 5.3 எதிர்காலத்திற்கு ஆயத்தப்படுத்தும் கலைத்திட்டம்

வேகமாக மாறிவரும் உலகிற்கு மாணவர்களைத் தயார்படுத்த, எதிர்காலத்திற்குத் தேவையான அறிவையும் திறன்களையும் வழங்கும் கலைத்திட்டம் அவசியமானது. அந்த வகையில், மின்னுரு கல்வியறிவு, கணினிசார் சிந்தனை, உடல்நலம் மற்றும் குடிமையியல் பண்பு ஆகியவற்றை வளர்க்கும் புதுமையான கற்றல் முறைகளைப் பாடத்திட்டத்தில் இணைத்து மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. இம்முயற்சிகள், வகுப்பறைக் கல்விக்கு வலுசேர்ப்பதுடன், தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார் சமூகத்தில் மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் திகழ்வதற்குப் பெரிதும் உதவுகின்றன.

## அ) TNSPARK – செயற்கை நுண்ணறிவு, எந்திரனியல் மற்றும் இணையக் கற்றல் கருவிகள் திட்டம்

6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக, **தமிழ்நாடு பள்ளிகள் – செயற்கை நுண்ணறிவு, எந்திரனியல் மற்றும் இணையக் கற்றல் கருவிகள் திட்டம் (TNSPARK)** என்னும் புதிய திட்டத்தை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கணக்கீட்டுச் சிந்தனை, செயற்கை நுண்ணறிவு, நிரலாக்கம் (Coding), எந்திரனியல் மற்றும் அதிநவீன மின்னுரு தொழில்நுட்பங்கள் பற்றிய அடிப்படைக் கல்வியானது, இருமொழிப் பாடநூல்கள் மற்றும் முறையான கற்றல் வளங்கள் வாயிலாக வழங்கப்படுகின்றன.

தற்போது, இத்திட்டம் 5,000 அரசுப்பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் மாணவர்கள், உயர்கல்விக்கும் எதிர்கால

வேலைவாய்ப்புகளுக்கும் தேவையான மற்றும் இன்றியமையாத மின்னுரு திறன்களையும், சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றலையும் எளிதாகப் பெறுகின்றனர். பள்ளிக் கல்வியோடு வளர்ந்துவரும் நவீனக் கல்வித் தொழில்நுட்பங்களை இணைப்பதன் மூலம், மாணவர்கள் நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் பயன்படுத்தும் திறனை TNSPARK திட்டம் வழங்குகிறது.

**ஆ) விளையாட்டுப் போட்டிகள் மற்றும் உடற்கல்விக்கான கலைத்திட்டம்**

முழுமையான கல்வியில் உடல்நலம் பெருமளவு பங்கு வகிக்கும் என்பதை உணர்ந்து, 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்காக விளையாட்டு மற்றும் உடற்கல்விக்கான கலைத்திட்டம், பாடத்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் வளநூல்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது. பள்ளிக்கல்வியின் ஒரு முக்கியப் பகுதியாக விளையாட்டு மற்றும் உடல் உழைப்பை ஊக்குவிப்பதன் மூலம் மாணவர்களிடம்

உடற்தகுதி, ஆரோக்கியமான வாழ்க்கைமுறை, கூட்டாகச் செயல்படும் பண்பு, ஒழுக்கம் மற்றும் விளையாட்டு உணர்வு ஆகியவை வளர்க்கப்படுகின்றன.

## 5.4 மாணவர்களுக்கான கற்றல் வளங்கள்

கற்றலை வலுப்படுத்துதல், ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட கல்வித் தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்தல் போன்ற கல்விசார் நடவடிக்கைகளுடன் கலைத்திட்ட மேம்பாட்டுப் பணிகளையும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தி வருகிறது. கல்வி வடிவமைப்புகள், ஆசிரியர்களுக்கான கற்பித்தல் வளங்கள் மற்றும் குழந்தை மையக் கல்வி முன்னெடுப்புகள் ஆகியவற்றை உருவாக்கி அளிப்பதன் மூலம், பள்ளிகள் தங்கள் மாணவர்களின் கற்றல் தரத்தை உயர்த்தவும், ஒவ்வொரு குழந்தையும்

தம் வயதிற்குரிய கல்வித் திறன்களைப் பெறத் தேவையான கல்விசார் உதவிகளைப் பெறவும் இந்நிறுவனம் வழிவகை செய்கிறது.

**அ) அடிப்படைக் கற்றலை வலுப்படுத்துதலுக்கான பங்களிப்பு**

பள்ளிக்கல்வியின் பல்வேறு நிலைகளிலும் அடிப்படைக் கற்றலை வலுப்படுத்தவும், மாணவர்களின் கல்வித்திறனை உயர்த்தவும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் கல்விசார் வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. வகுப்பறைகளில் அடிப்படைக் கற்றலைச் செயல்படுத்தவும், மாணவர்களின் தேவைகளுக்கேற்ப உரிய கல்வி உதவிகளை வழங்கவும் தேவையான கலைத்திட்ட வடிவமைப்புகள், ஆசிரியர் கையேடுகள், கற்றல் பொருள்கள், மதிப்பீட்டுக்கருவிகள் மற்றும் கற்பித்தல் வழிகாட்டுதல்களை இந்நிறுவனம் உருவாக்கி அளிக்கிறது.

மேலும், மாணவர்களின் கற்றல் இடைவெளிகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப வகுப்பறையில் சிறப்புக் கவனம் செலுத்த உதவும் வகையில் கட்டமைக்கப்பட்ட குறைதீர்க் கற்றல் வளங்கள், ஆசிரியர் கையேடுகள் மற்றும் மதிப்பீட்டு முறைகளை உருவாக்கி, **திறன்** (THIRAN – Targeted Help for Improving Remediation and Academic Nurturing) என்ற பெயரில் வழங்கி வருகிறது. இத்தகைய முறையான மற்றும் சான்று அடிப்படையிலான கல்விச் செயல்பாடுகளின் மூலம், வகுப்பிற்கேற்ற மற்றும் மாணவர்களின் நிலைக்கேற்ற கற்றல் விளைவுகளும் அவர்களின் கற்றல் நிலையும் மேம்படுகின்றன.

**ஆ) மாணவர் நலன் மற்றும் விழுமியக் கல்வி**

மாணவர்களின் உடல், மனம் மற்றும் சமூக நல்வாழ்வை மேம்படுத்தும் பல்வேறு முயற்சிகள் மூலம் அவர்களின் முழுமையான வளர்ச்சியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

ஊக்குவிக்கிறது. **போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு** மற்றும் **அகல் விளக்குத் திட்டம்** போன்ற திட்டங்கள் மாணவர்களிடையே மனநலம், வாழ்க்கைத் திறன்கள், மின்னுரு பாதுகாப்பு, இணைய நெறிமுறைகள், பாலினச் சமத்துவம், போதைப் பொருள் தடுப்பு மற்றும் பொறுப்புள்ள குடிமைப் பண்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன.

பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு கற்றல் சூழலை உருவாக்கும் இந்த முயற்சிகள், நேர்மறையான எண்ணங்களையும், உணர்வுபூர்வமான மனவலிமையையும், பொறுப்பான நடத்தையையும் வளர்த்துக்கொள்ளவும், வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கவும் வழிவகுக்கின்றன.

### 5.5 பள்ளிகளுக்கான கல்விப் பங்களிப்பு

மின்னுரு கற்றல், தேர்வு, மதிப்பீட்டு முறைகள், சான்று அடிப்படையிலான கல்வித் திட்டமிடல் ஆகியவற்றை வலுப்படுத்துவதன் மூலம் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளிகளுக்குத் தொடர்ந்து கல்விசார் உதவிகளை வழங்கி வருகிறது. தொழில்நுட்ப அடிப்படையிலான கற்றல் வளங்கள், கல்விசார் கண்காணிப்பு, திறனறி மதிப்பீடுகள் மற்றும் கல்வி ஆராய்ச்சிகள் மூலம் வகுப்பறைக் கற்பித்தலின் தரத்தை உயர்த்தவும், மாணவர்களின் கற்றலை உன்னிப்பாகக் கவனிக்கவும், அறிவியல் பூர்வமான கல்விமுறைகளைப் பின்பற்றவும் இந்நிறுவனம் பள்ளிகளுக்கு உறுதுணையாகச் செயல்படுகிறது. இந்த முயற்சிகள், பள்ளிகளின் கட்டமைப்புத் திறனை வலுப்படுத்துவதோடு, தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிக் கல்வியின் தரத்தை நாளுக்கு நாள் மேம்படுத்தவும் பெரிதும் உதவுகின்றன.

## அ) தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வி மற்றும் மின்னுரு கற்றல்

தொழில்நுட்ப உதவியுடன் கூடிய கற்றல் முறை என்பது மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்விசார் உதவி அமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாகும். மாநில வள மையம் (State Resource Centre), மின்னுரு வள மையம் (Digital Content Cell) மற்றும் கல்வித் தொலைக்காட்சி (Kalvi TV) மூலமாக, கலைத்திட்டத்திற்கு ஏற்ற மின்னுரு கற்றல் வளங்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், உருவாக்கி வழங்கி வருகிறது. இவை வகுப்பறைக் கற்பித்தலை மேம்படுத்தவும், ஆசிரியர்களுக்குத் துணையாக இருக்கவும், மாணவர்களின் கற்றல் திறனை உயர்த்தவும் பெரிதும் உதவுகின்றன.

**மாநில வள மையம்**

புதிய மற்றும் நவீனக் கல்வித் தொழில்நுட்பங்களையும் செய்முறைக் கற்றல் முறைகளையும் ஊக்குவிப்பதன் மூலம் கற்பித்தல், கற்றல் செயல்பாடுகளை **மாநில வள மையம்** வலுப்படுத்துகிறது. மொழி, அறிவியல், கணித ஆய்வகங்கள், கணக்கீட்டுச் சிந்தனை ஆய்வகம், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான மையம் மற்றும் **கற்க கசடற** என்னும் தலைப்பிலான கற்றல் தளங்கள் போன்றவை ஆசிரியர் பயிற்சி, மாணவர்களின் கற்றல் மற்றும் புதுமையான கற்பித்தல்களுக்குத் துணை நிற்கிறது. மேலும், கல்வி சார்ந்த தலைப்புகளில் இணையவழிக் கூட்டங்கள், பட்டறைகள் மற்றும் வல்லுநர்களின் சொற்பொழிவுகளை நடத்துவதுடன், மையத்திற்கு நேரில் வந்து கல்வி கற்கும் வாய்ப்புகளையும் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைப்படி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்குகிறது.

## மின்னுரு வள மையம்

கலைத்திட்டம் சார்ந்த மின்னுரு பாடங்களான கல்விசார் காணொலிகள், அசைவூட்டப்படங்கள், ஊடாடும் கற்றல் கட்டகங்கள் (Interactive Learning Modules), மின்னுரு பாடநூல்கள் மற்றும் விரைவுத் துலங்கல் குறியீட்டுடன் (QR Code) கூடிய கற்றல் வளங்களை இம்மையம் உருவாக்குகிறது. இம்மின்னுரு வளங்கள், திறன் அடிப்படையிலான கற்றலையும் வகுப்பறைக் கற்பித்தலையும் செழுமைப்படுத்துகின்றன. மேலும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல இணையதளங்களைப் பயன்படுத்தித் தரமான கல்வி உள்ளடக்கங்களை எளிதில் பெற இவை உதவுகின்றன.

## கல்வித் தொலைக்காட்சி

பள்ளிக் கல்வித்துறைக்கே உரிய தனித்துவமான **கல்வித் தொலைக்காட்சி**, கலைத்திட்ட அடிப்படையிலான பாடங்கள், ஆசிரியர் பயிற்சி

நிகழ்ச்சிகள், வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் நிகழ்வுகள் மற்றும் கல்விசார் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களும் தரமான கற்றல் வளங்களைச் சமமாகப் பெறும்வகையில் முறையான ஒலி–ஒளி (Audio–Visual) கற்றல் நிகழ்ச்சிகள் மூலம் வகுப்பறைக் கற்பித்தலை உறுதி செய்வதற்காக கல்வித் தொலைக்காட்சி செயல்பட்டு வருகிறது.

**ஆ) திறன் சார் மதிப்பீடு**

கற்பித்தல் மற்றும் கற்றலின் தரத்தை மேம்படுத்துவதில் தேர்வு மற்றும் மதிப்பீடுகள் முக்கியப் பங்காற்றுகின்றன. மாணவர்களின் கற்றலைக் கண்காணிக்கவும், அவர்களின் கற்றல் இடைவெளிகளைக் கண்டறிந்து சரியான நேரத்தில் தகுந்த கல்வி உதவிகளை வழங்கவும், திறன் அடிப்படையிலான மதிப்பீட்டு முறைகளை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது.

மதிப்பீட்டுப் பிரிவு (Assessment Cell) மூலமாக மாநில அளவில் பல தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அவற்றுள், உயர் தொழில்நுட்ப ஆய்வகம் வாயிலாகச் செய்யப்படும் கற்றல் அடைவுகளை அளவிடும் மதிப்பீடுகள் (Hi–Tech Laboratory Assessments), எதிர்காலத்திற்கு ஆயத்தப்படுத்தும் மதிப்பீடுகள் (Future Ready Assessments), **திறன்** தேர்வுகள் (THIRAN Assessments) மற்றும் மாநில அளவிலான கல்வித் திறனடைவு ஆய்வுகள் (SLAS) ஆகியவை அடங்கும். இந்த மதிப்பீடுகளிலிருந்து பெறப்படும் முடிவுகள், சான்று அடிப்படையிலான கல்வித் திட்டமிடலுக்கும், கலைத்திட்டச் சீரமைப்புக்கும், வகுப்பறைக் கற்பித்தலை வலுப்படுத்துவதற்கும் வழிகாட்டுகின்றன. இவை, அரசுப்பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் திறன்கள் மேம்பட பெரும் பங்காற்றுகின்றன.

## 5.6 கல்வி ஆய்வுகள் மற்றும் சான்று அடிப்படையிலான திட்டமிடல்கள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்விசார் வழிகாட்டுதலில் கல்வி ஆராய்ச்சி என்பது மிக முக்கியமான பகுதியாகும். மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIETs) மூலமாக, வகுப்பறைக் கற்பித்தல் முறைகளை ஆராயவும், புதிய கல்வித் தேவைகளைக் கண்டறியவும், கல்வி நடவடிக்கைகளின் தாக்கத்தை மதிப்பீடு செய்யவும் இந்நிறுவனம் செயலாராய்ச்சிகளையும் கல்வி சார்ந்த ஆய்வுத் திட்டங்களையும் மேற்கொள்கிறது.

இந்த ஆய்வுகள் மூலம் கிடைக்கும் முடிவுகள், கலைத்திட்டத்தை உருவாக்கவும், ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கவும், மதிப்பீட்டு முறைகளை மேம்படுத்தவும், கொள்கை முடிவுகளை எடுக்கவும் வழிகாட்டுகின்றன. ஆராய்ச்சி அடிப்படையிலான

திட்டமிடலையும் தொடர்ச்சியான கல்விச் சீர்திருத்தங்களையும் ஊக்குவிப்பதன் மூலம், பள்ளிகள் சிறந்த கற்பித்தல் முறைகளைக் கடைப்பிடிக்கவும், தமிழ்நாடு முழுவதும் கல்வியின் தரத்தை உயர்த்தவும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உதவுகிறது.

**5.7 ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு**

தரமான பள்ளிக் கல்விக்கு ஆசிரியர்களே அடித்தளமாக விளங்குகின்றனர். புதிய கலைத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தவும், மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும் ஆசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாடு மிக அவசியமாகும். ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியக் கல்வியாளர்கள் ஆகியோரின் பாட அறிவை வளர்க்கவும், கற்பித்தல் முறைகள், வகுப்பறை மேலாண்மை, தலைமைப் பண்பு மற்றும் தொழில்நுட்பப் பயன்பாடு ஆகியவற்றை மேம்படுத்தவும் மாநிலக்

கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் விரிவான பயிற்சித் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் ஆசிரியர்களின் தொடர் கற்றலை ஊக்குவித்து, நாளுக்கு நாள் மாறிவரும் கல்வித் தேவைகளுக்கு ஏற்ப அவர்கள் சிறப்பாகச் செயல்பட உதவுகின்றன.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்காகக் கட்டமைக்கப்பட்ட ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் (TPD) பயிற்சிகளை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தி வருகிறது. புதிய கலைத்திட்டத்தைச் செயல்படுத்தவும் புதுமையான கற்பித்தல் முறைகள், திறன் அடிப்படையிலான கற்றல், கற்றல் விளைவுகள், மதிப்பீடு, உள்ளடங்கிய கல்வி, தகவல் மற்றும் தொடர்பியல் தொழில்நுட்பம், பாலின உணர்திறன் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு ஆகியவை இத்தகைய பயிற்சிகளின் முக்கிய நோக்கமாகும்.

2025–26ஆம் ஆண்டில், கலைத்திட்டக் கற்பித்தல் முறைகள், புதிய கற்பித்தல் உத்திகள், மதிப்பீட்டு முறைகள் மற்றும் உள்ளடங்கிய கல்வி குறித்து 9,680 பட்டதாரி ஆசிரியர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும், 6,370 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்றுநர்கள் வாயிலாகச் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுள் சில ஆசிரியர்கள், தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளுக்கான மின்னுரு கற்றல் வழிமுறைகளை உருவாக்குவதிலும் பங்களித்துள்ளனர். இம்முயற்சிகள், ஆசிரியர்களின் தொழில்முறைத் திறன்களை வலுப்படுத்தி, தமிழ்நாடு முழுவதும் வகுப்பறைக் கற்பித்தலின் தரத்தை உயர்த்துகின்றன.

**அ) தலைமைத்துவம் மற்றும் பணி வழிகாட்டல் பயிற்சி**

பள்ளிகளின் தரத்தை உயர்த்துகின்ற தலைமை ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து,

தலைமை ஆசிரியர்களுக்கும் புதிதாகப் பணியில் சேரும் ஆசிரியர்களுக்கும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சிறப்புத் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

2025–26ஆம் ஆண்டில், அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 950 தலைமை ஆசிரியர்களுக்குப் பள்ளித் தலைமைத்துவம், கல்விசார் நிருவாகம் மற்றும் குழந்தைகள் மையக் கற்பித்தல் முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், புதிதாகப் பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் பள்ளிக் கல்விமுறையில் தங்களை எளிதாக இணைத்துக்கொள்ள ஏதுவாக அவர்களுக்குப் பணி வழிகாட்டல் பயிற்சிகள் (Induction Training) வழங்கப்பட்டன. கற்பித்தல் முறைகள், மதிப்பீடு, கல்வித் தொழில்நுட்பம், உள்ளடங்கிய கல்வி, குழந்தைகள் பாதுகாப்பு, மனநலம் மற்றும் பள்ளி நிருவாகம் குறித்து 2,444 இடைநிலை ஆசிரியர்களும், 2,362 பட்டதாரி ஆசிரியர்களும், 820 முதுகலைப்

பட்டதாரி ஆசிரியர்களும் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சிகள், ஆசிரியர்களும் பள்ளியின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களும் கல்விச் சீர்திருத்தங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தவும், பள்ளி நிருவாகத்தை வலுப்படுத்தவும் உதவுகின்றன.

## ஆ) சிறப்புப் பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாறிவரும் கல்வித் தேவைகளுக்கு ஏற்றவாறு சிறப்புப் பயிற்சிகளை வழங்கி வருகிறது. இதில் தொல்லியல் பயிற்சி குறிப்பிடத்தக்கது. இது ஆசிரியர்களிடையே தமிழர்களின் நாகரிகம், பாரம்பரியம் மற்றும் தொல்லியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, வகுப்பறைக் கற்பித்தலில் இவற்றை எளிதாக இணைக்க வழிவகுக்கின்றன.

கூடுதலாக, TNSPARK ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின்கீழ் சுமார் 6,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி

அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 5,000 அரசுப் பள்ளிகளில் பயிலும் சுமார் 3.53 இலட்சம் மாணவர்களுக்குச் செயற்கை நுண்ணறிவு, குறியீட்டியல் (Coding) மற்றும் எந்திரனியல் தொடர்பான பாடங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. இச்சிறப்புப் பயிற்சிகள், ஆசிரியர்களின் துறைசார் அறிவை வளர்த்து, அவர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதோடு, நவீன மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கற்பித்தல் முறைகளைக் கையாளுவதில் அவர்களுக்குப் பெருமளவில் தன்னம்பிக்கையை அளிக்கின்றன.

**5.8 முடிவுரை**

கலைத்திட்ட உருவாக்கம், பாடநூல் உருவாக்கம், ஆசிரியர் கல்வி, மதிப்பீடு, கல்வித் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் கல்விசார் வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம், தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித்துறையின் முதுகெலும்பாக மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்

பயிற்சி நிறுவனம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. குழந்தை மையக் கல்வி முன்னெடுப்புகள், பள்ளிகளுக்குத் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் விரிவான ஆசிரியர் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் கற்பித்தல் மற்றும் கற்றலின் தரத்தை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வலுப்படுத்தி வருகிறது.

நடைபெற்றுவரும் கலைத்திட்டச் சீர்திருத்தங்கள், மேம்படுத்தப்பட்ட புதிய பாடநூல்களின் உருவாக்கம், எதிர்காலத்திற்கு ஆயத்தமாக்கும் கற்றலை ஊக்குவித்தல், மதிப்பீட்டு முறைகளை வலுப்படுத்துதல் மற்றும் ஆசிரியர்களின் திறனை வளர்ப்பதில் தொடர்ச்சியான பங்களிப்பு செய்தல் ஆகியவை இணைந்து மாணவர்களின் கற்றல் திறனை உயர்த்த உதவுகின்றன. மேலும், இதனால் அனைவரையும் உள்ளடக்கிய, சமமான மற்றும் திறன் அடிப்படையிலான ஒரு சிறந்த பள்ளிக் கல்விமுறையை உருவாக்க வழிவகுக்கிறது.

கல்வித்துறையில் புதுமைகளையும், சான்று அடிப்படையிலான கல்விச் செயல்பாடுகளையும் ஊக்குவிப்பதன் மூலம், ஒவ்வொரு மாணவருக்கும் உயர்தரமான, எதிர்காலத்திற்குத் தேவையான கல்வியை வழங்குவதற்கான தமிழ்நாட்டின் இலக்கை அடைவதில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மிக முக்கியப் பங்காற்றி வருகிறது.

# அத்தியாயம் – VI

# தனியார் பள்ளிகள் இயக்ககம்

## 6.1 அறிமுகம்

தமிழ்நாட்டில் செயல்படும் தனியார் பள்ளிகள் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுவதையும் தரமான கல்வி வழங்குவதையும் உறுதி செய்வதற்காக அவற்றை ஒழுங்குபடுத்துதல், நிருவகித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பொறுப்புகளைத் தனியார் பள்ளிகள் இயக்ககம் மேற்கொள்கிறது. மாநிலம் முழுவதும் சுமார் 63.42 இலட்சம் மாணவர்கள் பயிலும் 12,577 தனியார் பள்ளிகளை வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான ஒழுங்குமுறை அமைப்பின் மூலம் இவ்வியக்ககம் மேற்பார்வையிடுகிறது. பள்ளிக் கட்டமைப்பு, பாதுகாப்பு மற்றும் கல்வித்தரம் தொடர்பான நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகள் மற்றும் தரநிலைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்கிறது.

பள்ளிகளுக்கான அங்கீகாரம் மற்றும் புதுப்பித்தலை வெளிப்படையான இணையவழி முறையில் மேற்கொள்வதுடன், தகுதியான ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதையும் ஊக்குவிக்கிறது. மேலும், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்–2009–னை செயல்படுத்துவதற்கான மாநில ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்படுகிறது. இம்முயற்சிகள் மூலம், தனியார் பள்ளிக் கல்வி அமைப்பில் ஒழுங்குமுறையை ஏற்படுத்துதல், பொறுப்புகளை உணர்த்துதல் மற்றும் கல்வித் தரத்தை வலுப்படுத்துவதில் இவ்வியக்ககம் முக்கியப் பங்காற்றுகிறது.

### 6.2 கல்வி வாய்ப்பு மற்றும் மாணவர் நலன்

அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குச் சமமான கல்வி வாய்ப்பை உறுதிசெய்தல், மாணவர் நலனைப் பாதுகாத்தல் மற்றும்

அவர்களின் கல்வித் தேவைகளை நிறைவுசெய்தல் ஆகிய நோக்கங்களுடன் இவ்வியக்ககம் பல்வேறு மாணவர் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இம்முயற்சிகள் அனைவரையும் உள்ளடக்கிய பாதுகாப்பான, குழந்தைமையக் கற்றல் சூழலை உருவாக்கி, ஒவ்வொரு மாணவரும் கல்வியில் முழுமையாகப் பங்கேற்க உதவுகின்றன.

### (அ) குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் – 2009–யை செயல்படுத்துதல்

2009 ஆம் ஆண்டைய குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ், நலிவடைந்த பிரிவினர் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரைச் சேர்ந்த குழந்தைகளை அருகிலுள்ள தனியார் பள்ளிகளில் சேர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மாநில ஒருங்கிணைப்பு முகமையாக **தனியார் பள்ளிகள்**

**இயக்ககம்** செயல்படுகிறது. மாநிலம் முழுவதும் வெளிப்படையான மாணவர் சேர்க்கை முறையை ஒருங்கிணைத்து, தகுதியுடைய பள்ளிகளுக்குக் கட்டண ஈட்டுத்தொகை உரிய காலத்தில் வழங்கப்படுவதை உறுதிசெய்கிறது.

2025-26ஆம் கல்வியாண்டில், இச்சட்டத்தின்கீழ் சேர்க்கை பெற்ற 4,45,066 மாணவர்கள் மழலையர் கல்வி (எல்.கே.ஜி.) முதல் 8ஆம் வகுப்பு வரை கல்வி பயின்று வருகின்றனர். மேலும், 2026-27ஆம் கல்வியாண்டில் நுழைவுநிலை வகுப்பில் 64,390 குழந்தைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். தனியார் பள்ளிகளில் தரமான கல்வியை அனைவருக்கும் வழங்குவதை உறுதிசெய்வதன் மூலம், இத்திட்டம் கல்வி வாய்ப்புகளைத் தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறது.

**(ஆ) மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள்**

அரசு உதவிபெறாத சுயநிதித் தனியார் பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் 1 முதல் 10 வரையிலான வகுப்புகளில் பயிலும் தகுதியுடைய மாணவர்களுக்கு அரசு, கற்றல் உபகரணங்களை வழங்கிவருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2026–27ஆம் கல்வியாண்டில் ரூ.3.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 47,287 தமிழ்வழி மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இத்திட்டம், மாணவர்கள் தேவையான கற்றல் வளங்களைப் பெற்றுக் கல்வியைத் தொடர்ந்து பயிலவும், சமமான கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தவும் உதவுகிறது.

**(இ) மாணவர் பாதுகாப்பு மற்றும் நலன்**

பாதுகாப்பான மற்றும் கற்றலுக்கு உகந்த சூழலை உருவாக்குவது இவ்வியக்ககத்தின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். குழந்தைகளைப் பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் (POCSO)

குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சமூக நலத்துறை, காவல்துறை மற்றும் மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புகளுடன் இணைந்து தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்குத் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

மேலும், போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஆரோக்கியமான வாழ்க்கை முறை, பொறுப்புணர்வுள்ள நடத்தை மற்றும் நேர்மறையான சமூகப் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் தொடர்ச்சியான போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகின்றன. இம்முயற்சிகள் தனியார் பள்ளிகளில் பாதுகாப்பான, குழந்தைமைய மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பள்ளிச்சூழலை உருவாக்குகின்றன.

### 6.3 பள்ளி அங்கீகாரம் மற்றும் நிருவாக ஒழுங்குமுறை

தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் பிற விதிமுறைகளுக்கு ஏற்ப தனியார் பள்ளிகள் செயல்படுவதை இவ்வியக்ககம் உறுதிசெய்கிறது. வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான ஒழுங்குமுறை அமைப்பின் மூலம் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்தல், கல்வித் தரநிலைகளைப் பேணுதல் மற்றும் தனியார் பள்ளிகளின் பொறுப்புணர்வை வலுப்படுத்துதல் ஆகியவற்றுடன், நிறுவன மேம்பாட்டிற்கும் இவ்வியக்ககம் துணைபுரிகிறது.

## (அ) வெளிப்படையான இணையவழியிலான பள்ளி அங்கீகாரம் மற்றும் புதுப்பித்தல்

புதிய பள்ளிகளைத் தொடங்குதல், பள்ளிகளைத் தரம் உயர்த்துதல், அங்கீகாரத்தைப் புதுப்பித்தல், கூடுதல் பிரிவுகளுக்கான அனுமதி மற்றும் CBSE உள்ளிட்ட பிற வாரியப் பள்ளிகளுக்கான தடையில்லாச் சான்றிதழ் **(NOC)** வழங்குதல் தொடர்பான விண்ணப்பங்கள் **EMIS** Portal மற்றும் **TN Schools Portal** வழியாக உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த இணையவழி விண்ணப்ப முறை மூலம் பரிசீலிக்கப்படுகின்றன. இந்த இணையவழி முறை, விண்ணப்பங்களை முழுமையாக மின்னுரு வடிவில் சமர்ப்பித்தல், ஆவணங்களைச் சரிபார்த்தல் மற்றும் படிநிலை (Workflow) அடிப்படையிலான காலவரையறைக்குட்பட்ட பரிசீலனை ஆகியவற்றை எளிதாக்குகிறது. காகித நடைமுறைகளை நீக்கி, ஒழுங்குமுறை அனுமதிகளுக்கான வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வுமிக்க அமைப்பை

உருவாக்கியதன் மூலம், சேவை வழங்குதலில் மாறுபாடுகளற்ற இலகுவான செயல்திறன்கள் மேம்படுத்தப்பட்டதுடன், மாநிலம் முழுவதும் தனியார் பள்ளிகளின் நிருவாகமும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

எளிமைப்படுத்தப்பட்ட இணையவழி ஒழுங்குமுறை அமைப்பின்கீழ், 1,108 தனியார் பள்ளிகளுக்கான அங்கீகாரத்தைப் புதுப்பித்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தகுதியுடைய மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) மற்றும் பிற வாரியப் பள்ளிகள் தங்களது வாரியங்களுடன் இணைவு பெறுவதற்காகத் தடையில்லாச் சான்றிதழ்களும் (NOC) வழங்கப்பட்டுள்ளன.

**6.4 தனியார் பள்ளிகளில் கல்வித்தரம்**

சட்டப்பூர்வமான கல்விசார் தேவைகள் திறம்படச் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் தனியார் பள்ளிகளில் பாடத்திட்டச் செயல்பாட்டிற்கு ஆதரவு

அளித்தும் இவ்வியக்ககம் கல்வித்தரத்தை மேம்படுத்துகிறது. இம்முயற்சிகள் வகுப்பறைக் கற்பித்தலை வலுப்படுத்தி, மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதுடன், மாநிலக் கல்விக் கொள்கையானது அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளிலும் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்கின்றன.

**(அ) தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம்–2006–னை செயல்படுத்துதல்**

2006 ஆம் ஆண்டைய தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும், மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) மற்றும் பிற வாரியப் பள்ளிகள் உட்பட, 1 முதல் 10ஆம் வகுப்புவரை தமிழ் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இச்சட்டத்தைத் திறம்படச் செயல்படுத்தும் நோக்கில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு CBSE மற்றும் பிற கல்வி

வாரியப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

## 6.5 ஆசிரியர் திறன் மேம்பாடு

தனியார் பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியான திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை இவ்வியக்ககம் வழங்குகிறது. பாடத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துதல், புதுமையான கற்பித்தல் முறைகள் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், வகுப்பறை கற்பித்தலை மேம்படுத்தி மாணவர்களின் கற்றல் விளைவுகளை உயர்த்துகின்றன.

2026–2027ஆம் ஆண்டில், அனைத்துவகை தனியார் பள்ளிகளிலும் 1 முதல் 3 வரையிலான

வகுப்புகளுக்குக் கற்பிக்கும் சுமார் 61,656 ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIETs) மூலம், பயிற்சி பெற்ற வல்லுநர்கள் ஒத்துழைப்புடன் வழங்கப்படவுள்ள இப்பயிற்சிகள், திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை ஆசிரியர்கள் திறம்படச் செயல்படுத்தவும் வகுப்பறை கற்பித்தலை மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

### 6.6 முடிவுரை

தனியார் பள்ளிகள் இயக்ககம், வெளிப்படையான நிருவாகம், மாணவர் மைய முன்னெடுப்புகள், கல்விசார் உதவிகள் மற்றும் தொடர்ச்சியான ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மூலம் கல்வியின் ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சியைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்பை உறுதிசெய்தல், பாதுகாப்பான கற்றல் சூழலை உருவாக்குதல், சட்டப்பூர்வச் செயலாக்கத்தை

வலுப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான அமைப்புகள் மூலம் திறமையான இணையவழிச் சேவைகளை வழங்குதலையும் செயல்படுத்தி வருகிறது.

மேலும், அனைவரையும் உள்ளடக்கிய, சமத்துவமான மற்றும் உயர்தரமான பள்ளிக் கல்வி என்ற தமிழ்நாடு அரசின் நோக்கை நிறைவேற்றும் வகையில், ஒழுங்குமுறை, பொறுப்புணர்வு மற்றும் தரத்தை மையமாகக் கொண்ட தனியார் பள்ளிக் கல்வி அமைப்பை வலுப்படுத்துவதில் இவ்வியக்ககம் தொடர்ந்து பங்களித்து வருகிறது.

# அத்தியாயம் VII

# அரசுத் தேர்வுகள் இயக்ககம்

## 7.1 அறிமுகம்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் (DGE) தமிழ்நாட்டில் பொதுத்தேர்வுகள், உதவித்தொகைத் தேர்வுகள், பல்வேறு அரசால் அனுமதிக்கப்பட்ட பிற கல்வித்தேர்வுகள் ஆகியவற்றை நியாயத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையுடன் நடத்தும் மாநிலத் தேர்வு அமைப்பாகும். 1975ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து, அரசுத்தேர்வுகள் இயக்ககம் பெரிய அளவிலான தேர்வுகளை நடத்துதல், மாணவர்களின் கற்றல் திறனை மதிப்பீடு செய்தல், சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் கல்வி வளர்ச்சிக்கும் வாழ்நாள் கற்றலுக்கும் துணைபுரியும் தேர்வுச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

## 7.2 பொதுத் தேர்வுகள் மற்றும் கல்வி முன்னேற்றம்

கல்வித்தர மேம்பாட்டிற்காகவும் சான்றிதழ் வழங்குவதற்காகவும் வாழ்நாள் முழுமையும் கற்றலுக்கு உதவும் பொருட்டு இவ்வியக்ககம் பொதுத்தேர்வுகளையும் அரசால் அனுமதிக்கப்பட்ட பிற கல்வித் தேர்வுகளையும் நடத்துகின்றது. விரிவான திட்டமிடல், பாதுகாப்பான தேர்வுமுறைகள், தரப்படுத்தப்பட்ட மதிப்பீடு, தேர்வு முடிவுகளைக் குறித்த காலத்தில் வெளியிடுதல் ஆகியவற்றின் மூலம் இவ்வியக்ககம் தேர்வுகள் நடத்துவதில் நியாயம், நம்பகத்தன்மை, சீரான தரம் ஆகியவற்றை மாநிலம் முழுவதும் உறுதி செய்கின்றது.

### அ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பொதுத்தேர்வுகள்

மாநிலப் பாடத்திட்டத்தின்கீழ் பயிலும் மாணவர்களுக்கு உயர்நிலை (10ஆம் வகுப்பு), மேல்நிலைப் (12ஆம் வகுப்பு) பொதுத்தேர்வுகளை இவ்வியக்ககம் ஆண்டுதோறும் நடத்துகின்றது.

இத்தேர்வுகள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கிய மைல்கல்லாக அமைவதுடன், அவர்களின் உயர்கல்வி மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுக்கின்றன. மார்ச்/ஏப்ரல் 2026இல் நடத்தப்பட்ட பொதுத் தேர்வுகளின் விவரங்கள் பின்வருமாறு:

| **பொதுத் தேர்வு (மார்ச்/ஏப்ரல் 2026)** | **பள்ளிகள்** | **தேர்வெழுதிய மாணவர்கள்** |
|---|---:|---:|
| உயர்நிலை (வகுப்பு X) | 12,467 | 8,70,643 |
| மேல்நிலை (வகுப்பு XII) | 7,536 | 7,91,654 |
| மொத்தம் | 20,003 | 16,62,297 |

**ஆ) துணைத் தேர்வுகள்**

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் தேர்ச்சி பெறாத மாணவர்கள், அக்கல்வியாண்டை இழக்காமல் பயன்பெறும்வகையில் இவ்வியக்ககம் ஒவ்வோர் ஆண்டும் துணைத் தேர்வுகளை நடத்தி வருகின்றது. ஜூன்/ஜூலை 2026இல் நடத்தப்பட்ட

துணைத் தேர்வுகளின் விவரங்கள் பின்வருமாறு:

| **துணைத் தேர்வு (2026)** | **பதிவு செய்த மாணவர்கள்** |
|---|---|
| உயர்நிலை (வகுப்பு X) | 74,592 |
| மேல்நிலை (வகுப்பு XII) | 63,447 |
| மொத்தம் | 1,38,039 |

**இ) பிற கல்வித்தேர்வுகள்**

பொதுத்தேர்வுகள் மட்டுமல்லாது கல்வியைத் தொடர்வதற்கும், வேலை வாய்ப்புகளை எளிதாக்குவதற்காகவும் தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வை இவ்வியக்ககம் நடத்தி வருகின்றது. ஆகஸ்ட் 2025இல், 3,115 தனித்தேர்வர்கள் இத்தேர்வில் பங்கேற்றனர். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் (SCERT) அங்கீகரிக்கப்பட்ட பட்டயப் படிப்புகளில் சேர்ந்த மாணவர்களுக்கான தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வையும் இவ்வியக்ககம் நடத்துகின்றது.

மே/ஜூன் 2026 இல் நடைபெற்ற தேர்வில், 2,981 தேர்வர்கள் பங்கேற்றனர்.

## 7.3 மாணவர்–நலன் சார்ந்த தேர்வுச் சீர்திருத்தங்கள் மற்றும் சேவைகள்

தேர்வுகளை எளிதில் அணுகக்கூடியதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும், மன அழுத்தமற்றதாகவும் மாற்றுவதற்கு இவ்வியக்ககம் பல மாணவர் நலன்சார்ந்த செயல்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நடவடிக்கைகள், அனைத்து மாணவர்களுக்கும் சமமான வாய்ப்புகளை உறுதிசெய்து தேர்வு தொடர்பான மனஅழுத்தத்தைக் குறைத்து ஒவ்வொரு மாணவரும் தன்னம்பிக்கையுடன் தேர்வுகளை எதிர்கொள்ள வாய்ப்புகளை வழங்குகின்றன.

### அ) தேர்வுக் கட்டண விலக்கு

தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்வழியில் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப்

பொதுத்தேர்வெழுதும் பள்ளி மாணவர்களுக்குத் தேர்வுக்கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகின்றது. 2025–26ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் மூலம் 10ஆம் வகுப்பில் 4,20,977 மாணவர்களும், 12ஆம் வகுப்பில் 3,60,500 மாணவர்களும் பயன்பெற்றனர். முதன்முறையாகத் துணைத் தேர்வெழுதும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கான தட்கல் தேர்வுக்கட்டணத்தில் இருந்தும் இவ்வியக்ககம் விலக்களித்துள்ளது. இதனால், தகுதியுள்ள மாணவர்கள் கூடுதல் நிதிச்சுமையின்றித் தேர்வுகளை எதிர்கொள்கின்றனர்.

**ஆ) சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான தேர்வுச் சலுகைகள்**

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு (CwSN) கூடுதல் நேரம், தரைத்தள இருக்கை வசதி, தனித்தேர்வு அறைகள், சொல்வதை எழுதுபவர் (Scribes), பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு அறிவியல்

செய்முறைத் தேர்வுகளிலிருந்து விலக்கு மற்றும் பார்வையற்ற தேர்வர்களுக்கு மென்பொருளைப் பயன்படுத்தி மென்திரையில் வாசிக்கும் வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு தேர்வுச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. மார்ச் 2026 பொதுத்தேர்வில் இச்சலுகைகள் மூலம் 13,292 பத்தாம் வகுப்பு மாணவர்களும் 8,855 மேல்நிலை வகுப்பு மாணவர்களும் பயன்பெற்றனர்.

**இ) தேர்வுச் சீர்திருத்தங்கள்**

2025–26ஆம் கல்வியாண்டு முதல், தேர்வு தொடர்பான மன அழுத்தத்தைக் குறைக்கவும், கற்றலைத் தொடர்வதற்கும் மாணவர்கள் மிகுந்த தன்னம்பிக்கையுடன் மேல்நிலைக் கல்வியைத் தொடர ஏதுவாகவும் மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு இரத்து செய்யப்பட்டுள்ளது.

## 7.4 உதவித்தொகை மற்றும் திறனறித் தேர்வுகள்

கல்வியின் சிறப்பை அங்கீகரிக்கவும், திறமையான மாணவர்களை ஊக்குவிக்கவும், கல்வியைத் தொடர்வதற்கு நிதியுதவி வழங்கவும் இவ்வியக்ககம் உதவித்தொகை மற்றும் திறனறித் தேர்வுகளை நடத்துகிறது. இத்தேர்வுகள் கல்வியின் பல்வேறு நிலைகளில் உள்ள தகுதியான மாணவர்களை ஊக்குவிப்பதுடன், உயர்கல்வி மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

### அ) பள்ளி மாணவர்களுக்கான உதவித்தொகைத் தேர்வுகள்

பள்ளி மாணவர்களுக்காகத் தமிழ்நாடு ஊரகப்பகுதி மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு (TRUST), தேசிய வருவாய்வழி மற்றும் தகுதி படிப்பு உதவித்தொகை பெறுவதற்கான தேர்வு (NMMS), தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வு (CMTSE)

மற்றும் தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு (TLLAT) உள்ளிட்ட பல உதவித்தொகைத் தேர்வுகளை இவ்வியக்ககம் நடத்துகின்றது. இத்தேர்வுகள் கல்வியின் சிறப்பை ஊக்குவிக்க, திறமையான மாணவர்களைக் கண்டறிந்து, கல்வியைத் தொடர உதவும் உதவித்தொகைகளைப் பெற வாய்ப்பளிக்கின்றன.

**உதவித்தொகைத் தேர்வுகள் நடத்தப்பட்ட விவரம் :-**

| தேர்வு | தகுதியுள்ள மாணவர்கள் | தேர்வெழுதிய மாணவர்கள் (முந்தைய ஆண்டு) | உதவித்தொகை |
|---|---|---|---|
| தமிழ்நாடு ஊரகப்பகுதி மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு (TRUST) | கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் 9ஆம் வகுப்பு மாணவர்கள் | 1,04,145 | ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 100 மாணவர்கள் (50 மாணவர்கள் & 50 மாணவிகள்) நான்கு ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ரூ.1,000 பெறுவர். |

| | | | |
|---|---|---|---|
| தேசிய வருவாய்வழி மற்றும் தகுதி படிப்பு உதவித்தொகை பெறுவதற்கான தேர்வு (NMMS) | பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த 8ஆம் வகுப்பு மாணவர்கள் | 2,14,012 | 9 முதல் 12ஆம் வகுப்பு வரை 6,695 மாணவர்கள் ஆண்டுக்கு ரூ.12,000 பெறுவர். |
| தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வு (CMTSE) | அரசுப்பள்ளிகளில் பயிலும் 10–ஆம் வகுப்பு மாணவர்கள் | 1,43,492 | 1,000 மாணவர்கள் (500 மாணவர்கள் & 500 மாணவிகள்) 12ஆம் வகுப்பு வரை ஆண்டுக்கு ரூ. 10,000 பெறுவர். |
| தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்வு (TLLAT) | 11ஆம் வகுப்பு மாணவர்கள் | 2,57,764 | 1,500 மாணவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மாதம் ரூ.1,500 பெறுவர். |

## ஆ) பட்டதாரிகளுக்கான உதவித்தொகை மற்றும் நுழைவுத் தேர்வுகள்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) சார்பிலும் இவ்வியக்ககம் உதவித்தொகை மற்றும் நுழைவுத் தேர்வுகளை நடத்துகிறது. குடிமைப் பணிகள் முதல்நிலை பயிற்சி உதவித்தொகைத் தேர்வு, உண்டு–உறைவிடப் பயிற்சி நுழைவுத் தேர்வு மற்றும் உலகத் திறன் போட்டிக்காக நடத்தப்படும் தமிழ்நாடு

திறன் போட்டி – நிலை I பலவுள் தெரிவு வினாக்களைக் கொண்ட(MCQ) தேர்வு ஆகியவற்றை நடத்துகின்றது. இத்தேர்வுகள் திறமையான பட்டதாரிகளைக் கண்டறிந்து, மேம்படுத்தப்பட்ட பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் தேசிய, சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன.

### 7.5 தேர்வுசார் சேவைகள்

பொதுத்தேர்வுகள் மற்றும் உதவித்தொகைத் தேர்வுகளை நடத்துவதுடன், அனைவருக்கும் கல்வி வாய்ப்பை மேம்படுத்தும், தொடர்ந்து கல்வி கற்பதை எளிதாக்கும் மற்றும் தேசிய அளவிலான தேர்வுகளை நடத்த உதவும் பல்வேறு தேர்வுசார் சேவைகளையும் இவ்வியக்ககம் வழங்குகின்றது. இச்சேவைகள் மாநிலத்தின் தேர்வு முறையின் செயல்திறன், அனைவருக்கும் சென்றடைவதை உறுதி செய்கின்றன. மேலும், அனைத்து வகையான

தேர்வர்களுக்கும் தேர்வு எழுதுவது தொடர்பான அடிப்படை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்கின்றன.

**அ) அரசுத் தேர்வு சேவை மையங்கள்**

தனித்தேர்வர்கள் இணையவழியில் விண்ணப்பிக்கவும் உரிய வழிகாட்டுதல்களைப் பெறவும் மாநிலம் முழுவதும் 252 சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் தேர்வர்களுக்குப் பல்வேறு பொதுத்தேர்வுகளுக்கு இணையவழி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க உதவுவதுடன், தேர்வு தொடர்பான சேவைகளைப் பெறுவதற்கான வழிகாட்டுதலையும் தேர்வு மையத்தை எளிதில் அணுகவுமான பொதுமக்களுக்குரிய வசதிகளை மேம்படுத்துகின்றன.

**ஆ) தேசிய அளவிலான தேர்வுகளின் ஒருங்கிணைப்பு**

சென்னை மாவட்டத்தில் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) மற்றும் பணியாளர் தேர்வாணையம் (SSC) ஆகிய அமைப்புகளின் தேர்வுகளை நடத்துவதற்கான ஒருங்கிணைப்பு முகமையாகவும் இவ்வியக்ககம் செயல்படுகிறது. தேர்வுப் பணிகளை ஒருங்கிணைத்து, நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் தேசிய அளவிலான இத்தகைய தேர்வுகளைப் பாதுகாப்பாகவும், சீராகவும், வெளிப்படையாகவும் நடத்துவதை உறுதி செய்கின்றது.

**இ) சிறைச்சாலைகளில் தேர்வு மையங்கள்**

சிறைவாசிகளிடையே கல்வியைத் தொடர ஊக்குவிக்கவும், கல்வி முன்னேற்றத்தை எளிதாக்கவும், தனித்தேர்வர்களுக்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பொதுத்தேர்வுகளை நடத்தவும் சிறை வளாகங்களிலேயே தேர்வு மையங்கள்

அமைக்கப்படுகின்றன. முறைசார் கல்வியின் வழியாகச் சிறைவாசிகள் தங்கள் கல்வியைத் தொடரவும், தகுதிகளை வளர்த்துக் கொள்ளவும், சமூக மறுவாழ்வு பெறவும் இம்முயற்சி நல்லதொரு வாய்ப்பை வழங்குகிறது.

## 7.6 மின்னுரு நிருவாகம் மற்றும் பொதுமக்கள் சேவைகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் தேர்வு நிருவாகத்தை நவீனத் தொழில்நுட்பச் சேவைகள் மூலம் பல்வேறு மின்னுரு சேவைகளை அறிமுகப்படுத்தி மாற்றியுள்ளது. இச்சேவைகள் வெளிப்படைத்தன்மை, எளிதில் அணுகும் தன்மை, செயல்திறன் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டை மேம்படுத்துவதுடன், மாணவர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுக்கு தேர்வு தொடர்பான சேவைகளை விரைவாகவும், பாதுகாப்பாகவும், எளிதாகவும் பெற வழிவகுக்கின்றன.

### அ) மின்னுரு சேவைகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககம், தனது அதிகாரப்பூர்வ இணையத்தளத்தின் மூலம் தேர்வு தொடர்பான பல்வேறு சேவைகளை இணையவழியில் வழங்கி வருகிறது. தேர்வு விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பித்தல், தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் செய்தல், தேர்வுகால அட்டவணைகள், இணையவழியில் கட்டணம் செலுத்துதல், முந்தைய ஆண்டுகளின் வினாத்தாள்களைப் பெறுதல், இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல், மதிப்பெண் பட்டியலின் சான்றளிக்கப்பட்ட நகல்கள், இடப்பெயர்வு சான்றிதழ்கள் (Migration certificates) மற்றும் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான சான்றிதழ்கள் (PSTM) ஆகியவற்றையும் வழங்குகிறது.

மாணவர்கள் **DigiLocker** மூலம் தங்களது மின்னுரு சான்றிதழ்களைப் பதிவிறக்கம் செய்யலாம்.

வெளிநாடுகளுக்குக் கல்வி அல்லது வேலைவாய்ப்பிற்காகச் செல்லும் விண்ணப்பதாரர்கள், **e-SANAD** தளத்தின் மூலம் தங்களது கல்விச் சான்றிதழ்களுக்கு மின்னுரு சரிப்பார்த்தல் (Electronic Authentication) பெறும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மின்னுரு முன்னெடுப்புகள் தேர்வு தொடர்பான சேவைகளைப் பொதுமக்கள் எளிதாகப் பெறுவதையும், வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதையும் உறுதி செய்கின்றன.

**ஆ) தேர்வு முடிவுகள் வெளியீடு மற்றும் சான்றிதழ் சேவைகள்**

அரசுத் தேர்வுகள் இயக்ககம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency-TNeGA) உடன் ஒருங்கிணைந்து, தேர்வு முடிவுகளைப் புலனம் (WhatsApp) வழியாகவும் அதிகாரப்பூர்வ இணையத்தளங்கள், குறுஞ்செய்தி வழியாகவும் உரிய காலத்தில் வெளியிடுகிறது. மேலும், பள்ளிகள் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை

இணையவழியில் பதிவிறக்கம் செய்யவும், மாணவர்கள் விடைத்தாள்களின் நகல் பெறவும், மறு கூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்வு முடிவுகள் வெளியான உடனேயே மாணவர்களுக்குத் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களையும் இவ்வியக்ககம் வழங்குகிறது, மேலும், இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்கள், இடப்பெயர்வுச் சான்றிதழ்கள், மதிப்பெண் பட்டியலின் சான்றளிக்கப்பட்ட நகல்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களுக்கு இணையவழி மதிப்பெண் சான்றிதழ் உண்மைத் தன்மைச் சரிபார்ப்பு உள்ளிட்ட சேவைகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப அடிப்படையிலான இச்சேவைகள், தேர்வு நிருவாகத்தில் வெளிப்படைத்தன்மையை அதிகரித்து, பொதுமக்கள் எளிதில் அணுகும் முறையினை மேம்படுத்தி, அவர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளன.

## 7.7 முடிவுரை

பொதுத்தேர்வுகள், உதவித்தொகைத் தேர்வுகள் மதிப்பீடுகளை நியாயமான, பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதை உறுதி செய்வதன் மூலம் தமிழ்நாட்டின் தேர்வு முறையை அரசுத் தேர்வுகள் இயக்ககம் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. மாணவர் நலன் சார்ந்த தேர்வுச் சீர்திருத்தங்கள், தொழில்நுட்பம் சார்ந்த பொதுமக்கள் சேவைகள் மற்றும் திறமையான தேர்வு நிருவாகம் ஆகியனவற்றின் மூலம் இவ்வியக்ககம் கல்வி வளர்ச்சியை எளிதாக்குகிறது. திறமையை அங்கீகரித்து மாநிலம் முழுவதும் உள்ள மாணவர்களுக்கு எளிதில் அணுகக்கூடிய தேர்வுச் சேவைகளை வழங்குகிறது. இம்முயற்சிகள் தேர்வு முறையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்துவதுடன், தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வியின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்குத் துணைபுரியும் வலுவான, வெளிப்படையான மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்ற மதிப்பீட்டுக் கட்டமைப்பிற்குப் பங்களிக்கின்றன.

# அத்தியாயம் VIII

# பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம்

## 8.1. அறிமுகம்

பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் (DNFAE), தமிழ்நாட்டில் வயது வந்தோரின் எழுத்தறிவு மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலை மேம்படுத்துதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ளும் முதன்மை முகமை அமைப்பாகும். 1976ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இவ்வியக்ககம், சிறுவயதில் முறையான கல்வி கற்கும் வாய்ப்பைத் தவறவிட்ட வயது வந்தோர் கல்வியைத் தொடர அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை வழங்குவதுடன், திறன் மேம்பாடு மற்றும் சமூக மேம்பாட்டிற்கான வாய்ப்புகளையும் உருவாக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சமூகப் பங்கேற்பை அடிப்படையாகக் கொண்ட எழுத்தறிவுத் திட்டங்கள் மற்றும் பின்தங்கிய பிரிவினருக்கான இலக்கு சார்ந்த

செயல்பாடுகள் மூலம், பயன்பாட்டு எழுத்தறிவையும் வாழ்நாள் முழுவதும் கற்றலையும் ஊக்குவித்துச் சமூக, பொருளாதார மற்றும் குடிமைப் பொறுப்புகளில் வயது வந்தோரைத் திறம்படப் பங்கேற்க இவ்வியக்ககம் ஊக்குவிக்கிறது.

## 8.2 வயது வந்தோர் எழுத்தறிவு மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல்

வயது வந்தோர் எழுத்தறிவை மேம்படுத்துவது பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் முக்கியப் பணியாகும். இதற்காகத் திறனுடன் கட்டமைக்கப்பட்ட எழுத்தறிவுத் திட்டங்கள் மூலம் வயதுவந்தோருக்கு அடிப்படை வாசித்தல், எழுதுதல் மற்றும் எண்ணறிவுத் திறன்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. இத்திட்டங்கள் வயதுவந்தோரின் பயன்பாட்டு எழுத்தறிவை மேம்படுத்துவதோடு, அவர்களின் தனிநபர் முன்னேற்றம், வாழ்வாதார மேம்பாடு மற்றும் சமூகப்

பங்கேற்பையும் ஊக்குவிக்கின்றன. மேலும், வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்து, அனைவரையும் உள்ளடக்கிய எழுத்தறிவு மிக்க சமூகத்தை உருவாக்க இத்திட்டங்கள் வழிவகுக்கின்றன.

**அ) புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் (NILP)**

**புதிய பாரத எழுத்தறிவுத் திட்டமானது (NILP) 2022−2027,** மத்திய மற்றும் மாநில அரசுகளின் **60:40** விகித நிதிப் பங்களிப்பில், தமிழ்நாட்டின் அனைத்து **38** மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட எழுத்தறிவு பெறாத வயது வந்தோருக்கு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள எழுத்தறிவு மையங்கள் வாயிலாக அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு வழங்கப்படுகிறது.

**2026–2027**ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதும் **4.31 இலட்சம் கற்போர்** அடையாளம் காணப்பட்டு, **23,454 எழுத்தறிவு மையங்களில்** சேர்க்கப்பட்டுள்ளனர். இம்மையங்களில் **23,454 தன்னார்வலர்களின்** உதவியுடன் கற்றல்–கற்பித்தல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயிலும் அனைத்துக் கற்போருக்கும் அவர்களின் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை மதிப்பீடு செய்யும் வகையில், **2026ஆம் ஆண்டு அக்டோபர் / நவம்பர்** மாதங்களில் அடிப்படை எழுத்தறிவுத்தேர்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த **2026–2027**ஆம் நிதியாண்டிற்கு **ரூ.7.45 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.3 சிறப்பு எழுத்தறிவுத் திட்ட முன்னெடுப்புகள்

சமூகத்தின் குறிப்பிட்ட சில பிரிவினருக்குக் கல்வியில் சிறப்புக் கவனத்துடன் கூடிய

இடைவினைச் செயல்பாடுகள் அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கும் எழுத்தறிவின் பயன்கள் சென்றடையும் வகையில் இவ்வியக்ககம் சிறப்பு எழுத்தறிவுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. வழக்கமான கற்றல் சூழலுக்கு அப்பாற்பட்ட கல்வி வாய்ப்புகளை வழங்குவதன்மூலம், சமூக ஒருங்கிணைப்பு, மறுவாழ்வு மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலை மேம்படுத்துவதை இத்திட்டங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

எழுத்தறிவு பெறாத சிறைவாசிகளுக்கு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை (Foundational Literacy and Numeracy) வழங்குவதன் மூலம், அவர்களின் மறுவாழ்வு மற்றும் சமூகத்துடன் அவர்கள் மீண்டும் ஒருங்கிணைவதற்கு ஆதரவளிப்பது ஆகியவற்றை நோக்கமாகக்கொண்டு **சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்** செயல்படுத்தப்படுகிறது. சிறைத்துறையுடன்

ஒருங்கிணைந்து 20 மத்திய மற்றும் மாவட்டச் சிறைகளில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், 2026 ஆகஸ்ட் 15 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மொத்தம் **1,341** எழுதப் படிக்கத் தெரியாத **சிறைவாசிகள்** அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்குச் சிறைத்துறையில் உள்ள தன்னார்வ ஆசிரியர்கள் மூலம் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுக் கல்வி வழங்கப்படும். தொடர்ந்து மேற்கொள்ளப்படும் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான கல்வி வழிகாட்டுதலின் மூலம், 2027 மார்ச் மாதம் நடைபெறவுள்ள **அடிப்படை எழுத்தறிவுக்கான மதிப்பீட்டில்** (Basic Literacy Assessment) பங்கேற்கக் கற்போர்கள் ஆயத்தப்படுத்தப்படுவர். இத்திட்டம், **ரூ.30.00 இலட்சம்** மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

## 8.4 முடிவுரை

பள்ளிக் கல்வி அமைப்பிற்கு அப்பாற்பட்ட கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தும் வகையில், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், வயது வந்தோருக்கான எழுத்தறிவு, வாழ்நாள் முழுமைக்குமான கற்றல் மற்றும் பின்தங்கிய சமூகப் பிரிவினருக்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி ஆதரவு ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்கிவருகிறது. சமூக அடிப்படையிலான எழுத்தறிவுத் திட்டங்கள் மற்றும் சமூகத்தில் உள்ள பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பிரிவினருக்கான சிறப்புக் கல்வி முயற்சிகள் வாயிலாகப் பயன்பாட்டு எழுத்தறிவை மேம்படுத்துதல், சமூகத்துடன் இணைந்து செயல்படுவதை வலுப்படுத்துதல் மற்றும் தனிநபர்கள் பொருளாதார, சமூக மற்றும் குடிமைச் செயல்பாடுகளில் திறம்படப் பங்கேற்பதற்கான திறன்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களை இவ்வியக்ககம் நிறைவேற்றி வருகிறது. இத்தகைய தொடர்ச்சியான மற்றும் ஒருங்கிணைந்த

முயற்சிகள், அனைவருக்கும் கல்வி வாய்ப்புகளை உறுதிசெய்து, எழுத்தறிவு பெற்ற, உள்ளடக்கிய மற்றும் வலிமைமிக்க தமிழ்நாட்டை உருவாக்கும் அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு வலுவான அடித்தளமாக அமைகின்றன.

# அத்தியாயம் IX

# ஆசிரியர் தேர்வு வாரியம்

## 9.1 அறிமுகம்

ஆசிரியர் தேர்வு வாரியம் அரசுப் பள்ளிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு சட்டக் கல்லூரிகள், அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் மாநிலப் பல்கலைக்கழகங்களுக்குத் தகுதியும் திறனும் வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கான முகமையாகத் திகழ்கிறது. மேலும், அரசு கல்வி நிறுவனங்களில் தகுதியும், திறனும் பெற்ற ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுவதை உறுதி செய்வதற்காக, ஆசிரியர் பணிக்கான தகுதித் தேர்வுகளையும் இவ்வாரியம் நடத்தி வருகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம், வெளிப்படைத்தன்மை, தகுதி, மற்றும் நவீனத் தொழில்நுட்பம் சார்ந்த நியாயமான தேர்வு முறைகளைப் பின்பற்றிச் சமூக நீதியையும் சமவாய்ப்பையும் உறுதி செய்வதோடு, மாநிலத்தின் கல்வித் தரத்தை மேலும் வலுப்படுத்தி வருகிறது.

## 9.2 ஆசிரியர் தகுதித் தேர்வுகள் மற்றும் நேரடி நியமனத் தேர்வுகள்

அரசு கல்வி நிறுவனங்களில் நிலவும் காலிப்பணியிடங்களை நிரப்பும் நோக்கில், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆசிரியர் தகுதித் தேர்வுகள் மற்றும் நேரடி நியமனத் தேர்வுகளை நடத்தி வருகிறது. வெளிப்படையான, மேம்படுத்தப்பட்ட, தகுதி அடிப்படையிலான தேர்வு நடைமுறைகள் மூலம் தகுதியான ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதன் வாயிலாக, சமூக நீதி மற்றும் சமவாய்ப்பு உறுதி செய்யப்படுகின்றன. மாநிலத்தின் கற்பித்தல் மற்றும் கற்றல் தரத்தை மேம்படுத்துவதில் இத்தேர்வு நடைமுறைகள் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றுகின்றன.

### அ) தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு (TNTET)

**2026ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில்**, பணிபுரியும் ஆசிரியர்களுக்கான தமிழ்நாடு ஆசிரியர்

தகுதித் தேர்வு நடத்தப்பட்டது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| தாள் | தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் | தேர்வெழுதியவர்கள் |
|---|---|---|
| தாள் –1 | 61,386 | 59,535 |
| தாள் –2 | 1,67,743 | 1,60,929 |

**ஆ) நேரடி நியமனத் தேர்வு**

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வருடாந்திர கால அட்டவணையின்படி, அரசு கல்வி நிறுவன ஆசிரியர் பணியிடங்களுக்கு நேரடி நியமனத் தேர்வினை மேற்கொள்கிறது. அரசுப் பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தகுதியான ஆசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் நியமனங்களை உறுதிசெய்ய, வெளிப்படையான மற்றும் மேம்படுத்தப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. நேரடி நியமனத் தேர்வு நடவடிக்கைகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

| நியமனங்கள் | பணியிடங்கள் | தற்போதைய நிலை |
|---|---|---|
| உதவிப் பேராசிரியர்கள் – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் / அரசு கல்வியியல் கல்லூரிகள் | 2,708 | போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு மதிப்பெண் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. தொடர் தெரிவுப் பணிகள் நடைபெற்று வருகிறது. |
| சட்டக் கல்லூரிகளில் இணைப் பேராசிரியர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் (சட்டமுன்படிப்பு) | 132 | தொடர் தெரிவுப் பணிகள் நடைபெற்று வருகிறது. |
| பட்டதாரி ஆசிரியர்கள் / ஆசிரியர் பயிற்றுநர்கள் | அறிவிக்கை 2026 செப்டம்பர் மாதத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. | |

## 9.3 தொழில்நுட்ப அடிப்படையிலான நியமனத் தேர்வுச் சீர்திருத்தங்கள்

ஆசிரியர் தேர்வு வாரியம் மின்னுரு முன்னெடுப்புகளின் மூலம் நவீனமயமாக்கப்பட்ட நியமனத் தேர்வு நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை, செயல்திறன், துல்லியம் மற்றும் விண்ணப்பதாரர்களின் வசதி ஆகியனவற்றைத்

தொடர்ந்து வழங்க உள்ளது. இத்தொழில்நுட்ப அடிப்படையிலான மேம்பாடுகள் நியமனத் தேர்வு நடைமுறைகளை எளிமைப்படுத்துவதோடு, நிருவாகத் திறனை வலுப்படுத்தி, நியமனத் தேர்வு சார்ந்த நடைமுறைகளில் தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துகின்றன.

**அ) இணையவழி இடஒதுக்கீட்டுப் பட்டியல் முறை**

உரிய அரசாணைகளின் அடிப்படையில், இனவாரியான இடஒதுக்கீட்டுப் பட்டியலைத் தானியங்கி முறையில் உருவாக்குதல் மற்றும் இடஒதுக்கீட்டுப் பட்டியல்களைக் காலமுறைப்படிப் புதுப்பித்தல் ஆகிய செயல்பாடுகளை எளிதாக மேற்கொள்ளும் வகையில் **இணையவழி இடஒதுக்கீட்டுப் பட்டியல் முறையை** அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்முயற்சியானது, நியமனத் தேர்வு சார்ந்த நடைமுறைகளில் துல்லியம் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த உதவுகிறது.

## ஆ) இணையவழி விண்ணப்ப அமைப்பு

விண்ணப்பதாரர்களுக்கு எளிதான இணையவழி விண்ணப்பச் சேவையை வழங்கும் நோக்கில், நிகழ்நேர உதவி மையம், இணையவழிக் கலந்துரையாடல் வசதி, அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான விடைத் தொகுப்பு, விண்ணப்பிக்கும் போது படிப்படியான மின்னுரு வழிகாட்டுதல் மற்றும் விளக்கக் காணொலிகள் ஆகியவற்றின் மூலம் **இணையவழி விண்ணப்ப அமைப்பை** வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்முயற்சிகள் இணையவழி விண்ணப்பங்களை எளிதாகச் சமர்ப்பிப்பதையும், விண்ணப்பதாரர்களின் சந்தேகங்களுக்கு உரிய நேரத்தில் உடனடித் தீர்வுகளை வழங்குவதையும் உறுதி செய்கின்றன.

### இ) மின்னுரு நூலகம் மற்றும் பாடவல்லுநர்கள் தரவுத்தளம்

ஆசிரியர் தேர்வு வாரிய நூலகம், புதுப்பிக்கப்பட்ட குறிப்பு நூல்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட பாடவாரியான வல்லுநர்களின் விரிவான விவரங்களைக் கொண்ட தரவுத்தளத்துடன் கூடிய **மின்னுரு நூலகமாக** மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்முயற்சிகள் மதிப்பீட்டுத் தரத்தை உயர்த்துவதோடு, வெளிப்படைத்தன்மையையும் மற்றும் நியமனத் தேர்வுகள் சார்ந்த செயல்பாடுகளையும் மேம்படுத்துகிறது.

### 9.4 முடிவுரை

வெளிப்படையான நியமனத் தேர்வு நடைமுறைகள், காலமுறைப்படியான நியமனத் தேர்வுகள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த மேம்பாடுகள் ஆகியவற்றின் வாயிலாகத் தகுதியான ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் பணியை ஆசிரியர் தேர்வு வாரியம்

தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. அரசு கல்வி நிறுவனங்களுக்கான ஆசிரியர் தகுதித் தேர்வுகளை நடத்துதல், திறன்மிக்க ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் மற்றும் மின்னுரு முன்னெடுப்புச் செயல்பாடுகள் வாயிலாக நியமனத் தேர்வு நடைமுறைகளை நவீனமயமாக்குதல் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் செயல்திறன், நம்பகத்தன்மை மற்றும் விரைவுத்தன்மை மேம்படுத்தப்படுகிறது. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இம்முயற்சிகள் திறன்மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதோடு, தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியின் தரத்தை மேன்மேலும் வலுப்படுத்த வழிவகை செய்கிறது.

# அத்தியாயம் –x

## பொது நூலக இயக்ககம்

### 10.1 அறிமுகம்

தமிழ்நாட்டில் பொது நூலக அமைப்பை மேம்படுத்தி வலுப்படுத்துவதற்கான தலைமை அமைப்பாகப் **பொது நூலக இயக்ககம் (DPL)** செயல்பட்டு வருகிறது. **தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948இன்** கீழ் நிறுவப்பட்ட இவ்வியக்ககம், நகர்ப்புற, கிராமப்புற மக்களுக்கு அறிவு, தகவல், வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான சமமான அணுகலை வழங்கல் ஆகிய விரிவான பொது நூலக வலையமைப்பை நிருவகித்து வருவதோடு, வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், இலக்கியப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், நவீன நூலகச் சேவைகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம், கல்வி ஆராய்ச்சி மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலை மேம்படுத்துவதோடு, சமூகத்தின் அனைத்துத்

தரப்பினருக்கும் அறிவை எளிதில் அணுகக்கூடியதாக மாற்றுவதில் இவ்வியக்கம் முக்கியப் பங்காற்றுகிறது.

### 10.2 பொது நூலகச் சேவைகள்

தமிழ்நாடு, இந்தியாவின் மிகப்பெரிய, விரிவான பொதுநூலக அமைப்புகளில் ஒன்றை உருவாக்கி, மாநிலம் முழுவதும் அறிவு, தகவல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான சமமான வாய்ப்பை உறுதி செய்துள்ளது. மாநிலத்தின் முதன்மை நூலகங்களை மையமாகக் கொண்டு, மாவட்ட, சமூக நூலகங்களின் விரிவான வலையமைப்பால் வலுப்படுத்தப்பட்டுள்ள பொது நூலக அமைப்பு, மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், போட்டித் தேர்வு எழுதுவோர் மற்றும் பொதுமக்களின் அறிவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், தமிழ்நாட்டின் இலக்கிய மற்றும் பண்பாட்டு மரபுகளையும் பாதுகாத்து வளர்க்கும் முக்கியப் பணியை மேற்கொண்டு வருகிறது.

**அ) மாநிலத்தின் முதன்மை நூலகங்கள்**

கல்வி, ஆராய்ச்சி மற்றும் அறிவுப் பரவலுக்கான சிறப்புமிக்க மையங்களாக விளங்கும் மூன்று முதன்மை நூலகங்களைப் பொது நூலக இயக்ககம் நிருவகித்து வருகிறது.

- **கன்னிமாரா பொது நூலகம், சென்னை –** இது இந்தியாவின் தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. ***நூல்கள் மற்றும் செய்தித்தாள்கள் வழங்கல் (பொது நூலகங்கள்) சட்டம்,* 1954–**இன் கீழ் பெறப்படும் வெளியீடுகளைப் பாதுகாத்து, நாட்டில் வெளியிடப்பட்ட அறிவுச் செல்வங்களைப் பாதுகாக்கும் முக்கியக் களஞ்சியமாகச் செயல்படுகிறது.
- **அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை –** இந்நூலகம் உலகத் தரம் வாய்ந்த பொதுநூலகமாக விளங்கி, மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், போட்டித் தேர்வுக்குத் தயாராகும் இளைஞர்கள், பார்வைத்திறன் குறைபாடுடைய வாசகர்கள் ஆகியோருக்காக

நவீனக் கற்றல் வசதிகள் மற்றும் சிறப்புத் தொகுப்புகளுடன் கூடிய விரிவான நூலக வளங்களை வழங்குகிறது.

- **கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரை** – தென் தமிழ்நாட்டு மக்களுக்கு நவீன மின்னுரு வசதிகள், குழந்தைகளுக்கான கற்றல் வளாகங்கள் மற்றும் சிறப்புமிக்க ஆராய்ச்சி நூல் தொகுப்புகளுடன் சேவையளிக்கும் நவீன அறிவு மையமாகத் திகழ்கிறது.

**ஆ) பாரம்பரிய நூலகங்கள்**

தமிழ்நாட்டின் செழுமையான இலக்கியம், வரலாறு, பண்பாடு ஆகிய மரபுகளைப் பாதுகாத்து, ஆராய்ச்சி மற்றும் கல்விசார் பணிகளை ஊக்குவிக்கும் பல அரசு நிதியுதவி பெறும் பாரம்பரிய நூலகங்களுக்கும் பொது நூலக இயக்ககம் ஆதரவு வழங்கி வருகிறது.

**மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்**

ஆசியாவின் மிகப் பழமையான நூலகங்களில் ஒன்றான இந்நூலகம், அரிய கையெழுத்துப் பிரதிகள், ஓலைச்சுவடிகள் மற்றும் வரலாற்று ஆவணங்களைப்

பாதுகாத்து, வரலாறு மற்றும் இலக்கிய ஆராய்ச்சிக்கான முக்கிய மையமாக விளங்குகிறது.

**டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை**

தமிழ்த்தாத்தா டாக்டர் **உ. வே. சாமிநாத ஐயரின்** இலக்கியப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து வரும் இந்நூலகம், அரிய கையெழுத்துப் பிரதிகள் மற்றும் அரிய வெளியீடுகளைச் சேமித்து, தமிழ்மொழி மற்றும் இலக்கிய ஆராய்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகிறது.

**மறைமலையடிகள் நூலகம், சென்னை**

**மறைமலையடிகளின்** நினைவாக இயங்கிவரும் இந்நூலகம், தமிழ் நூல்கள் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளின் வளமான தொகுப்புகளைப் பராமரித்து, தமிழ் மொழியின் ஆய்வு மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறது.

**ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சென்னை**

பன்னாட்டு அளவில் அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி நூலகமான இந்நூலகம், தமிழ் அச்சு நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் அரிய வெளியீடுகளின் மிகப் பெரிய தொகுப்புகளில் ஒன்றைப் பாதுகாத்து, கல்வி

மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு முக்கிய ஆதாரமாக விளங்குகிறது.

இப்பாரம்பரிய நூலகங்கள் அனைத்தும் இணைந்து, தமிழ்நாட்டின் விலைமதிப்பற்ற ஆவணப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதோடு, ஆராய்ச்சி, கற்றல் மற்றும் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியையும் பரவலையும் ஊக்குவிக்கும் முக்கிய அறிவு மையங்களாக விளங்கி வருகின்றன.

| **நூலக வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| மாவட்ட மைய நூலகங்கள் | 38 |
| கிளை நூலகங்கள் | 1,921 |
| ஊர்ப்புற நூலகங்கள் | 1,915 |
| நடமாடும் நூலகங்கள் | 14 |
| பகுதிநேர நூலகங்கள் | 794 |
| சிறப்புப் பகுதிநேர நூலகங்கள் | 73 |
| **இயக்ககத்தின்கீழ் உள்ள மொத்த நூலகங்கள்** | **4,755** |

## 10.3 வாசிப்புப் பண்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் சமூகப் பங்கேற்பு

தரமான நூலக வளங்கள், வெளிப்படையான நூல் கொள்முதல் நடைமுறைகள், இலக்கிய ஈடுபாட்டு நிகழ்வுகள், பொதுமக்களைச் சென்றடையும் பல்வேறு விழிப்புணர்வு, பங்கேற்பு நிகழ்ச்சிகள் மூலம், பொது நூலக இயக்ககம் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, சமூகப் பங்கேற்பை வலுப்படுத்தி வருகிறது. இம்முயற்சிகள், பொது நூலகங்களை உயிரோட்டமிக்க சமூகக் கற்றல் மையங்களாக மேம்படுத்துவதோடு, அனைத்து வயதினரிடையேயும் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளன.

### அ) வெளிப்படையான நூல் கொள்முதல்

வெளிப்படையான நூல் கொள்முதல் கொள்கை – 2024இன் மூலம், பொது நூலகங்களுக்குத் தரமான நூல்களைத் தேர்வு செய்தல், கொள்முதல் செய்தல், மாநிலம் முழுவதும் உள்ள நூலகங்களுக்குச் சமமான முறையில் பகிர்ந்தளித்தல் ஆகிய செயல்முறைகள் நியாயமான, வெளிப்படையான, பொறுப்புணர்வுமிக்க வகையில் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கொள்கையின் மூலம், மாநிலம் முழுவதும் உள்ள

வாசகர்கள் சமகால வெளியீடுகள், குறிப்பு நூல்கள், பல்வகையான கற்றல் வளங்களை உள்ளடக்கிய தரமான நூல் தொகுப்புகளை அணுகும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

**ஆ) வாசகர் வட்டங்கள் மற்றும் நூலக விருதுகள்**

வாசகர் வட்டங்கள், வாசகர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் ஆகியோருக்கிடையே கருத்துப்பரிமாற்றம் மேற்கொள்ளும் தளமாக அமைந்து, இலக்கியக் கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதுடன், நூலக நடவடிக்கைகளில் சமூகத்தின் பங்கேற்பை மேலும் வலுப்படுத்துகின்றன. மேலும், **நூலக ஆர்வலர் விருது**, **டாக்டர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது**, சிறந்த நூலகங்களுக்கான விருதுகள் ஆகியவற்றின் மூலம் சிறப்பான பங்களிப்புகளையும் சாதனைகளையும் பொது நூலக இயக்ககம் அங்கீகரித்துப் பாராட்டுகிறது. இதன்மூலம், நூலகச் சேவைகளில் புதுமையான அணுகுமுறைகள், உயர்தர சேவை, சிறந்த செயல்திறன் ஆகியவை ஊக்குவிக்கப்படுகின்றன.

**இ) மாவட்டப் புத்தகத் திருவிழாக்கள்**

பொதுமக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வலுப்படுத்தவும், நூல்களுக்கான அணுகலை

மேம்படுத்தவும், பொது நூலக இயக்ககம் 2022–23ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு முழுவதும் மாவட்டப் புத்தகத் திருவிழாக்களை நடத்தி வருகிறது. அரசின் தொடர்ச்சியான ஆதரவுடன் இம்முயற்சி ஆண்டுதோறும் செயல்படுத்தப்படும் திட்டமாக வளர்ச்சியடைந்து, இலட்சக்கணக்கான வாசகர்கள் பயனடைய வழிவகுப்பதோடு, மாநிலம் முழுவதும் வாசிப்புப் பண்பாட்டை மேலும் செழுமைப்படுத்தி வருகிறது.

## 10.4 தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியத்தை மேம்படுத்துதல்

இலக்கியத் திருவிழாக்கள், புத்தகத் திருவிழாக்கள் மற்றும் பன்னாட்டுப் பதிப்பக ஒத்துழைப்புகள் ஆகியவற்றின் மூலம், தமிழ்மொழி, இலக்கியம், பண்பாட்டுப் பாரம்பரியம் ஆகியவற்றைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் பொது நூலக இயக்ககம் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றி வருகிறது. இம்முயற்சிகள், தமிழின் செழுமையான இலக்கிய மரபுகளைப் போற்றுவதோடு எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், வாசகர்கள் போன்றோர் இலக்கியத்தில் ஈடுபாட்டுடன் செயல்படுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கி, தமிழ்

இலக்கியத்தின் பரவலைத் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் விரிவுபடுத்துகின்றன.

**அ) இலக்கியத் திருவிழாக்கள்**

தமிழ்நாட்டின் செழுமையான இலக்கிய மரபுகளைப் போற்றுவதற்கும், பொதுமக்களின் இலக்கிய ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கும், பொது நூலக இயக்ககம் **பொருநை, சிறுவாணி, காவேரி, வைகை** மற்றும் **சென்னை இலக்கியத் திருவிழா** உள்ளிட்ட மண்டல இலக்கியத் திருவிழாக்களை நடத்தி வருகிறது. மேலும், **இளைஞர் இலக்கியத் திருவிழாக்கள்** மூலம் இளம் தலைமுறையினரிடையே வாசிப்புப் பழக்கம், படைப்பாற்றல் மற்றும் இலக்கிய ஆர்வத்தை வளர்க்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஆ) தேசிய மற்றும் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாக்கள்**

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களிடையே தமிழ் நூல்களைப் பரவலாக அறிமுகப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கில், இந்தியாவின் முக்கிய நகரங்களிலும் வெளிநாடுகளிலும் பொது நூலக இயக்ககம் புத்தகத் திருவிழாக்களை நடத்தி வருகிறது.

**சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா**, மொழிபெயர்ப்பு, பதிப்பக ஒத்துழைப்புகள் மற்றும் உலகளவில் தமிழ் இலக்கியத்தை பரப்புவதற்கான முக்கியப் பன்னாட்டுத் தளமாக உருவெடுத்துள்ளது. ஆண்டுதோறும் அதிகரித்து வரும் பன்னாட்டுப் பங்கேற்பும், பதிப்பகங்களுக்கிடையேயான ஒத்துழைப்புகளும், தமிழ் இலக்கியப் படைப்புகளுக்கு உலகளவில் கிடைத்து வரும் அங்கீகாரத்தை வெளிப்படுத்துகின்றன.

## 10.5 நவீன நூலக உள்கட்டமைப்பு மற்றும் மின்னுரு சேவைகள்

பொது நூலகங்களின் உள்கட்டமைப்பை விரிவுபடுத்தி, மேம்படுத்தப்பட்ட மின்னுரு சேவைகள் மூலமாக, நூல்களை எளிதில் பெறும் வசதி, எளிமைப்படுத்தப்பட்ட சேவை மற்றும் பயனாளர்களின் பயன்பாட்டு அனுபவத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் பொது நூலக இயக்ககம் தொடர்ந்து நவீனமயமாக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சிகள், பொது நூலகங்களை அனைவரும் பயன்படுத்தக்கூடிய, தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நவீன அறிவு மையங்களாக மாற்றுவதோடு, சமூகத்தில் மாறிவரும் கல்வி, தகவல்

மற்றும் ஆராய்ச்சித் தேவைகளைத் திறம்படப் பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்தி வருகின்றன.

### அ) நூலக உள்கட்டமைப்பு மேம்பாடு

மாநிலம் முழுவதும் தரமான நூலகச் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில், **பெரியார் அறிவுலகம்**, **காமராஜர் அறிவுலகம்**, **காயிதே மில்லத் அறிவுலகம்**, **பாரதிதாசன் அறிவுலகம்** மற்றும் **அஞ்சலை அம்மாள் அறிவுலகம்** உள்ளிட்ட புதிய அறிவு மையங்களை அரசு நிறுவி வருகிறது. இம்மையங்களில் நவீன வாசிப்பு வசதிகள், கருத்தரங்க கூடங்கள் மற்றும் விரிவான நூல் தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் உயர்தர நூலகச் சேவைகள் வழங்கப்படும். இதன்மூலம், மாநிலம் முழுவதும் தரமான நூலகச் சேவைகளுக்கான வாய்ப்பு மேலும் விரிவுபடுத்தப்படும்.

### ஆ) மின்னுரு நூலக முயற்சிகள்

தகவல் தொடர்பு தொழில்நுட்ப (ICT) உள்கட்டமைப்பு, அருகலை (Wi–Fi) இணைப்பு மற்றும் மின்னுரு வாசிப்பு வசதிகளை வலுப்படுத்துவதுடன், இணையவழி நூல்கள், ஆய்விதழ்கள், பருவ இதழ்கள்

மற்றும் செய்தித் தாள்களை வழங்கும் வகையில் பொது நூலக இயக்ககம் மின்னுரு நூலகச் சேவைகளை விரிவுபடுத்தி வருகிறது. மேலும், பயனாளர்களின் வசதியை மேம்படுத்தும் வகையில், கட்டணமில்லா வசதி மற்றும் விரைவுத் துலங்கல் குறியீடு **QR, RFID,** மற்றும் **NFC** தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட மின்னுரு உறுப்பினர் அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம், நூலகச் சேவைகள் மேலும் எளிதில் அணுகக்கூடியதாகவும், திறன்மிக்கதாகவும், பயனாளர் நட்புடையதாகவும் மாற்றப்பட்டு வருகின்றன.

### 10.6 முடிவுரை

பொது நூலக இயக்ககம், அறிவு பெறுவதற்கான வாய்ப்பை விரிவுபடுத்துதல், வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல், மாநிலம் முழுவதும் வாசிப்புப் பண்பாட்டை வளர்த்தெடுத்தல் ஆகியவற்றின் மூலம், தமிழ்நாட்டின் பொது நூலக அமைப்பைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. இவ்வியக்ககம், விரிவுபடுத்தப்பட்ட நூலக அமைப்பு, பாரம்பரியமிக்க இலக்கியங்களைப் பாதுகாத்தல், சமூகப் பங்கேற்பை மையமாகக் கொண்ட முன்முயற்சிகள், நவீன நூலக உள்கட்டமைப்பு ஆகியவற்றின் வாயிலாக,

கல்விக்கான வாய்ப்புகளை மேம்படுத்தி, அனைத்து வயதினருக்கும் அறிவு வளங்களை எளிதில் அணுகக்கூடியதாக மாற்றி வருகிறது. இத்தகைய தொடர்ச்சியான முயற்சிகளால் அனைவரையும் உள்ளடக்கிய கற்றல், பண்பாடு மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கான மையங்களாகப் பொது நூலகங்கள் வலுப்படுத்தப்படுகின்றன.

# அத்தியாயம் –XI

## தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

### 11.1 அறிமுகம்

தமிழ்நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்குப் பாடநூல்கள் அச்சிடுதல், கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்தல் மற்றும் உரிய காலத்தில் வழங்குவதை உறுதிசெய்யும் மாநிலத்தின் முக்கிய முகமையாகத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் (TNTB&ESC) திகழ்கிறது. பள்ளிக் கல்வித்துறைக்குத் தரம் வாய்ந்த பாடநூல்கள் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கித் துணைநிற்பதுடன், பல்வேறு கல்வி வளங்களுக்கான தலைமைக் கொள்முதல் முகமையாகவும் செயல்படும் இக்கழகம், அரசுத் துறைகளுக்கான அச்சுப் பணிகளையும் ஏற்று நடத்தி வருகிறது. மேலும், வெளியீடுகள், மொழிபெயர்ப்பு மற்றும் ஆவணப் பாதுகாப்புப் பணிகள் மூலம் தமிழ் மொழியையும் அதன் இலக்கியத்திற்கான

அறிவுப் பரவலையும் இக்கழகம் ஊக்குவித்து வருகிறது. இதன் வழியே, அனைத்துத் தரப்பினருக்கும் தரமான கற்றல் வளங்கள் மற்றும் வாழ்நாள் முழுமைக்கும் கல்வி சமமாகக் கிடைப்பதை உறுதிசெய்யத் துணைபுரிகிறது.

### 11.2 பாடநூல் அச்சிடுதலும் விநியோகமும்

தரம் வாய்ந்த பாடநூல்கள், உரிய காலத்தில் கிடைப்பதை உறுதி செய்வதே இக்கழகத்தின் முக்கியப் பொறுப்பாகும். அச்சிடுதல், கொள்முதல் மற்றும் விநியோகம் ஆகியவற்றின் ஒரு விரிவான வலையமைப்பு மூலம், ஒவ்வொரு கல்வி ஆண்டும் தொடங்குவதற்கு முன்பே அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளுக்கு இக்கழகம் பாடநூல்களை வழங்கி வருகிறது; இதன் மூலம் மாநிலம் முழுவதும் வகுப்பறைக் கற்பித்தலும் கற்றலும் தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்கிறது.

ஒன்று முதல் பன்னிரண்டு வரையிலான வகுப்புகளுக்குரிய பாடநூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் இக்கழகம் உருவாக்குகிறது. ஆசிரியர்களுக்கான கையேடுகளையும் மழலையர் முதல், பதின்பருவச் சிறார் வரை அனைவருக்கும் ஆண்டு முழுவதும் கற்கும் பாடநூல்களையும் உயர்தரமான தாளில் அச்சிட்டு வழங்குகின்றது.

| **வகை** | **பாடப்புத்தகங்களின் எண்ணிக்கை** | **மதிப்பு (ரூ. கோடியில்)** |
|---|---|---|
| அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் (இலவச விநியோகம்) | 4.28 கோடி | 285.79 |
| தனியார் பள்ளிகள் (விற்பனைப் பிரதிகள்) | 2.15 கோடி | 317.59 |

2026-27ஆம் கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்பாக இக்கழகம், 272 இலட்சம் முதல் பருவ மற்றும் ஆண்டு முழுமைக்குமான பாடப்புத்தகப் பிரதிகளை அச்சிட்டு, அரசு மற்றும் அரசு உதவிபெறும்

பள்ளிகளுக்கு வழங்கியது. மேலும், 144 இலட்சம் பாடப்புத்தகப் பிரதிகளை, தனியார் பள்ளிகளுக்கு வழங்கியுள்ளது. இக்கழகம் மாநிலம் முழுவதும் உரிய நேரத்தில் பாடப்புத்தகங்கள் கிடைக்கும் வண்ணம் அனைவரும் எளிதில் அணுகும் வகையில் 22 மண்டல அலுவலகங்கள் வாயிலாகவும், இணையவழிச் சேவை, இ–சேவை மையங்கள், பிரத்தியேக விற்பனை மையங்கள் மற்றும் கழகத்தின் இணையத்தளம் ஆகியவற்றின் வாயிலாகவும் தனியார் பள்ளிகள் மற்றும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்கிறது.

## 11.3 மாணவர்களுக்கான கற்றல் துணைக்கருவிகள் மற்றும் கொள்முதல் சேவைகள்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உபகரணங்களுக்கான மாநிலத்தின் முக்கியக் கொள்முதல் முகமையாக இக்கழகம் செயல்படுகிறது. பள்ளி திறப்பதற்கு முன்பே மாணவர்களுக்கான கற்றல் துணைப்பொருள்களை உரிய காலத்தில் கொள்முதல்

செய்து விநியோகிப்பதை உறுதி செய்வதன் மூலம், தடையின்றி கற்றல் தொடர்வதை இக்கழகம் ஆதரிப்பதுடன் வகுப்பறை கற்றல் சூழலுக்கு ஆயத்தப்படுத்துவதையும் வலுப்படுத்துகிறது. நவீனக் கற்றல், கற்பித்தல் நடைமுறைகளுக்குத் தேவையான கல்வி உள்கட்டமைப்புகளின் கொள்முதல் பணிகளையும் இக்கழகம் மேற்கொள்கிறது.

2026-27ஆம் ஆண்டில், கழகம் 187 கோடி ரூபாய் செலவில் புத்தகப் பைகள், காலணிகள், கம்பளிச்சட்டைகள், கணித உபகரணப் பெட்டிகள், வண்ணம் தீட்டும் குச்சிகள், வண்ணப் பென்சில்கள், புவியியல் வரைபடப் புத்தகங்கள் மற்றும் பிற கற்றல் பொருள்கள் உள்ளிட்ட 11 வகைக் கல்வித் தொகுப்புகளைக் கொள்முதல் செய்து விநியோகித்துள்ளது. இவை அனைத்தும் பள்ளிகள் திறக்கப்படும் முன்னரே பள்ளிகளைச் சென்றடைந்தன. மேலும் இக்கழகம், திறன்மிகு (smart) வகுப்பறை உபகரணங்கள், உயர் தொழில்நுட்ப ஆய்வக

உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ஆகியனவற்றையும் கொள்முதல் செய்கிறது. மாநிலம் முழுவதும் உள்ள பள்ளிகளின் உள்கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கும் இக்கழகம் துணைபுரிகின்றது.

### 11.4 அரசுத் துறைகளுக்கான அச்சிடும் சேவைகள்

பள்ளிக்கல்வி மட்டுமன்றி, அரசின் பிற துறைகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான நூல்களை அச்சிட்டு வழங்குகிறது. இதனால், அரசு முகமைகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான நூல்கள், பயிற்சிப் பொருள்கள், பிற வெளியீட்டு நூல்கள் ஆகியவை அனைவருக்கும் உரிய நேரத்தில் கிடைக்கின்றன.

இக்கழகம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், கல்லூரிக் கல்வி இயக்ககம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பல நிறுவனங்களுக்குப் புத்தகங்களையும் கற்றல்

பொருள்களையும் அச்சிடுகிறது. 2025–26ஆம் ஆண்டில், இக்கழகம் ரூ.105.17 கோடி மதிப்புள்ள 6.33 கோடி புத்தகப் பிரதிகளை அச்சிட்டு, நிருவாகச் செலவாக ரூ.4.82 கோடியை ஈட்டியது.

## 11.5 வெளியீடுகள், மொழிபெயர்ப்பு மற்றும் அறிவுப் பரவல்

இக்கழகம் பாடநூல்களை உருவாக்கி அளிப்பதோடு, புதிய நூல்களை வெளியிடுதல், மொழிபெயர்ப்பு நூல்களை உருவாக்குதல், பண்டைத் தமிழ் இலக்கியங்களை மீள்பதிப்பு செய்தல் மற்றும் தமிழ் மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கப் பல முயற்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியனவற்றின் மூலம் இலக்கிய வளங்களையும் கல்வி வளங்களையும் மேம்படுத்துவதில் சிறந்த பங்காற்றி வருகிறது. இக்கழகத்தின் நூல்கள் உயர்கல்வியை வலுப்படுத்தவும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் தமிழக மக்களுக்கும் தேவையான அறிவுச் செல்வத்தை எட்டச் செய்கின்றன.

**(அ) இலக்கிய பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்**

அரிய நூல்களையும் வரலாற்று நூல்களையும் மின்னாக்கம் செய்து, மீள்பதிப்பிடுவதன் மூலம் இக்கழகம் அவற்றைப் பாதுகாத்து வருகிறது. இதுவரை 32 துறைகளைச் சேர்ந்த 875 அரிய நூல்கள் மின்னாக்கம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 635 நூல்கள் ஆவணப் பதிப்புகளாக மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள நூல்கள் வெளியீட்டிற்காக உருவாக்கப்பட்டு வருகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள், சிறந்த ஆளுமைகளின் நினைவு மலர்கள் மற்றும் செம்மொழித் தமிழ் இலக்கியப் படைப்புகளை மறுபதிப்பிட்டு, தமிழின் அரிய இலக்கியச் செல்வங்களை எதிர்காலத் தலைமுறையினருக்குப் பாதுகாத்து வழங்குவதிலும் இக்கழகம் முக்கியப் பங்காற்றி வருகிறது.

### (ஆ) மொழிபெயர்ப்பு மற்றும் கல்வி வெளியீடுகள்

உயர்கல்வியை வலுப்படுத்தவும், தமிழில் அறிவியல் சார்ந்த தரமான நூல்கள் கிடைப்பதை விரிவுபடுத்தவும், மருத்துவம், பொறியியல், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளில் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட நூல்களை இக்கழகம் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறது. இக்கழகம் இன்றியமையாத தமிழ் இலக்கியப் படைப்புகளை ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் உலக மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடுகின்றது. இதன் மூலம் தமிழ் இலக்கியத்தின் உலகளாவிய பரவலை விரிவாக்குகிறது. இரட்டைக் காப்பியங்களின் மொழிபெயர்ப்பு, தமிழ் இலக்கியங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியீடுகள் மற்றும் தேசிய, பன்னாட்டுப் பதிப்பகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் வெளியீட்டுத் திட்டங்கள் ஆகியவை இக்கழகத்தின் முக்கிய முன்னெடுப்புகளாகும்.

## (இ) சிறார் வெளியீடுகள் மற்றும் வாசிப்பு ஊக்குவிப்பு

சிறார்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் நோக்கில், இளந்தளிர் இலக்கியத் திட்டம் வாயிலாகச் சமத்துவம், ஒழுக்கம், அறிவியல் மனப்பான்மை, வாழ்வியல் திறன்கள் போன்ற கருத்துகளை மையமாகக் கொண்ட உயர்தரச் சிறார் நூல்களை இக்கழகம் வெளியிடுகின்றது. உலகப் புகழ்பெற்ற இலக்கியங்கள் எளிய தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதோடு, பல்வேறு சிறார் இலக்கிய நூல்களையும் வெளியிட்டு, குழந்தைகளின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதோடு, அவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கும் துணைபுரிகின்றது.

## (ஈ) மின்னணு வெளியீடுகள் மற்றும் பொதுமக்கள் அணுகல்

மக்களுக்கு வெளியீடுகள் கிடைப்பதை மேலும் எளிதாக்கும் வகையில், இணையவழி விற்பனை, மாவட்ட நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்களில்

அமைக்கப்பட்டுள்ள விற்பனை நிலையங்கள் மற்றும் சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் அமைந்துள்ள சென்னைப் புத்தகப் பூங்கா ஆகியவற்றின் மூலம் கழகம் தனது பொது விற்பனையைத் தொடர்ந்து விரிவுபடுத்துகிறது. இந்த நடவடிக்கைகள், பாடநூல்கள், போட்டித் தேர்வுப் புத்தகங்கள் மற்றும் இலக்கிய வெளியீடுகள் எளிதில் கிடைப்பதை உறுதி செய்வதுடன், மாநிலம் முழுவதும் அறிவுப் பரவலை வலுப்படுத்துகின்றன.

பள்ளிக் கல்வித் துறைக்குத் தரமான பாடநூல்கள், கல்வி உபகரணங்கள் மற்றும் மாணவர்களின் கற்றல் வளங்கள் ஆகியவை உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பள்ளிக் கல்விக்குத் துணை செய்வதில் தொடர்ச்சியாக முக்கியப் பங்காற்றி வருகிறது. திறமையான கொள்முதல் முறைகள், வெளியீடு மற்றும் மொழிபெயர்ப்பு முயற்சிகள், இலக்கிய மரபைப்

பாதுகாத்தல் மற்றும் அறிவுசார் வளங்களை மக்கள் அணுகும் வாய்ப்பை விரிவுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம், இக்கழகம் வகுப்பறைக் கற்றலை வலுப்படுத்துகிறது. வாசிப்பு மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்கும் பழக்கத்தை ஊக்குவிக்கிறது. சமத்துவமான, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய மற்றும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளத் தயாரான கல்வியைத் தமிழ்நாட்டில் வழங்குவதற்கான இலட்சியப் பார்வைக்கு இது வலுவான பங்களிப்பை நல்குகிறது.

### 11.6 முடிவுரை

சமூக நீதி, மனிதவள மேம்பாடு மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையாக விளங்கும் பள்ளிக் கல்விக்குத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து மிக உயர்ந்த முன்னுரிமை அளித்து வருகிறது. பள்ளிக் கல்வியின் ஒவ்வொரு பரிமாணத்தையும் வலுப்படுத்த சமத்துவம்,

அனைவரையும் உள்ளடக்கிய தன்மை மற்றும் கல்விச்சிறப்பு ஆகிய கொள்கைகளின் வழிகாட்டுதலில் அடிப்படைக் கற்றல், பாடத்திட்ட மாற்றம் முதல் ஆசிரியர் திறன் மேம்பாடு, மின்னுரு புதுமை, மாணவர்களின் நல்வாழ்வு, அனைவரையும் உள்ளடக்கிய கல்வி மற்றும் நிறுவன ஆளுமை வரை விரிவான சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

தொடர்ச்சியான பொது முதலீடு, தரவு அடிப்படையிலான கொள்கை முன்னெடுப்புகள் மற்றும் தொழில்நுட்பத்தின் வாயிலாகச் சேவை வழங்குதல் ஆகியவற்றின் மூலம், தரமான கல்விக்கான வாய்ப்பை விரிவுபடுத்தியுள்ளதுடன், கற்றல் விளைவுகளைத் தொடர்ந்து மேம்படுத்தி, பாதுகாப்பான, அனைவருக்குமான உள்ளடக்கிய மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான கற்றல் சூழல்களையும் அரசு உருவாக்கியுள்ளது. இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சிகள் மாநிலத்தின் அரசு கல்வி அமைப்பை வலுப்படுத்தியுள்ளன; மேலும் சமூக அல்லது

பொருளாதாரப் பின்னணியைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு குழந்தையும் கற்றுக்கொள்ளவும், சிறந்து விளங்கவும், தனது முழுத்திறமையை உணரவும் வாய்ப்பிருப்பதை உறுதி செய்வதில் தமிழ்நாட்டின் தளராத உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறு மாநிலத்தின் தொடர்ச்சியான, சமூக, பண்பாட்டு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கக் கூடிய அறிவுசார்ந்த, திறமையான மற்றும் சமூகப் பொறுப்புள்ள ஒரு தலைமுறையை தமிழ்நாடு தொடர்ந்து கட்டமைத்து வருகிறது.

**ராஜ்மோகன்**
பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி,
செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்




சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இன்று (18.05.2026) மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள் ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ள ஒன்பது பாட நூல்களை வெளியிட, பள்ளிக்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். சந்தர மோகன், B., இ.ஆ.ப., பெற்றுக் கொண்டார். உடன் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர். மா. ஆர்த்தி, இ.ஆ.ப., ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் மற்றும் பொது நூலகத் துறை இயக்குநர் திருமதி. எஸ். ஜெயந்தி, இ.ஆ.ப., பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் திருமதி ந. லதா, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் அவர்கள் இன்று (29.05.2026) சென்னை, சிந்தாதிரிப்பேட்டை தனக்கோட்டி நடுநிலைப்பள்ளியில் 2026–2027 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கையை தொடங்கி வைத்து, பாடப்புத்தகம், நோட்டுப்புத்தகம், புத்தகப்பை, சீருடை மற்றும் வண்ணபென்சில் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வி கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.சந்தர மோகன்.B இ.ஆ.ப., பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், இணை இயக்குநர் (நிர்வாகம்) திரு. ஆர். சுவாமிநாதன் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



இன்று (19.05.2026) மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள் சென்னை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் உள்ள மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கக SIEMAT கருத்தரங்கக் கூடத்தில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் 1ஆம் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரை மாநில அளவில் புதிய பாடநூல்களுக்கான அறிமுகப் பயிற்சியை தொடங்கி வைத்து, ஆசிரியர்களுக்கான கையேட்டினை வெளியிட்டார். உடன் பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். சந்தர மோகன். B. இ.ஆ.ப., மாதிரிப்பள்ளிகள் உறுப்பினர் செயலர் திரு. இரா. சுதன் இ.ஆ.ப.,(வி.ஓய்வு),



சென்னையில் இன்று (24.07.2026) மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் முதுநிலை விரிவுரையாளர்களாகப் பணிபுரிந்து வந்த 7 நபர்களுக்கு இணை இயக்குநர் மற்றும் முதல்வர்களாகப் பதவி உயர்வு ஆணைகள் மற்றும் விரிவுரையாளர்களாகப் பணிபுரிந்து வந்த 12 நபர்களுக்கு முதுநிலை விரிவுரையாளர்களாகப் பதவி உயர்வு ஆணைகள் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். சந்தர மோகன். B இ.ஆ.ப., மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் திருமதி.ந.லதா மற்றும் இணை இயக்குநர் திரு.எம்.இராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தை எளிமையாக்கும் நடவடிக்கையாக, மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, தகவல் மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் அவர்கள், ஜூன் 16, 2026 அன்று 848 தனியார் பள்ளிகளின் தாளாளர்களுக்கு அங்கீகார ஆணைகளை நேரடியாக வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். சந்தர மோகன் B. இ. ஆ. ப., தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் ச. சுகன்யா மற்றும் இணை இயக்குநர்கள் திரு. து. கணேஷ்மூர்த்தி, திரு. ச. மார்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



உயர்மட்ட வல்லுநர் குழு மற்றும் கலைத்திட்ட வடிவமைப்பு குழுக்கூட்டம்.
இடம்: ACL, கோட்டூர்புரம், சென்னை. நாள் 21.7.2026.




மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு, ராஜ்மோகன் அவர்கள் மார்ச் 2026–இல் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கான தேர்வு முடிவுகளை 20.05.2026 அன்று இணையதளத்திலும், குறுஞ்செய்தியாகவும் (SMS) மற்றும் முதன் முறையாக வாட்ஸ்அப் (Whatsapp) செயலியிலும் வெளியிட்டார்.



29.05.2026 அன்று சென்னை, இராயபுரம் சரகம், சிந்தாதிரிப்பேட்டை, தனக்கோட்டி நடுநிலைப் பள்ளியில் 2026 – 27ம் கல்வியாண்டிற்கான புதிய மாணவர் சேர்க்கையினை துவக்கி வைத்து புதிய மாணவர்களுக்கு பாடப்புத்தகம், நோட்டு மற்றும் கல்வி உதவி பொருட்கள் மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.